538

No. M. 2210

வருஷ சந்தா ரூ 1-8-0.

...OR &
...ROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

மலர் V Sepr. 1928 இதழ் 10

No.
2 4 OCT 1928
...ICE ... MADRAS



ஜகன்மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி அணா 3.

X
ண21', N22 JM
N28.5'10
182849

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்.

## நமது சந்தா நேயர்கட்கு முக்கிய அறிவிப்பு.

பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். அங்ஙனமிருக்க சிலர் அடுத்த சஞ்சிகை வந்தபிறகு முன் மாதத்து சஞ்சிகை வரவில்லையென்றும், நாம் அனுப்பத் தவறிவிட்டதாகவும் எழுதுகிறார்கள். இன்னும் சிலர் 2, 3 மாதங்கள் கழித்து சஞ்சிகை வரவில்லை யென்கிறார்கள். இது மிகவும் விசனிக்கத் தக்கதே. ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 10 தேதிக்குள் உள் நாட்டு சந்தா நேயர்களுக்கும், 15 தேதிக்குள் வெளி நாட்டு சந்தா நேயர்களுக்கும் கிடைக்காவிட்டால் தபாலில் தவறிவிட்டதெனத் தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையையனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்று அணு ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

நமக்கு எழுதும் கடிதத்தில் தங்களது சந்தா நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறி விடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

மானேஜர்:—:''ஜகன்மோகினி'' ஆபீஸ்
திருவல்லிக்கேணி சென்னை

---


## "ஜகன்மோகினி"யின் முதல் இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த நாவல்கள்

| | | |
|---|---|---|
| மலர் I. | ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) | ரூ. 4 0 0 |
| மலர் II. | விலாஸவதி (2-பாகங்கள்) | ரூ. 3 0 0 |
| | ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை. | |
| | கனக சபை .... .... | ரூ. 1 8 0 |
| | கோகிலம் .... .... | ரூ. 0 6 0 |

''ஜகன்மோகினி'' ஆபீஸ்
26, தோடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

OF THE REGISTRAR OF ...
No. ——
24 OCT 1928
MADRAS

## நமது சந்தா நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

அன்புமிக்க சகோதர சகோதரிகாள்!

கருணையங்கடலாகிய கடவுளின் திருவருளினாலும் தங்களுடைய அளவு கடந்த பிரீதியினாலும் பேருதவியினாலும் நமது மோகினியின் 5-வதாண்டு இனிது நடைபெற்று இன்னும் இரண்டு சஞ்சிகைகளில் பூர்த்தியாகி அதன் மேல் டிசம்பர் மாதத்தில் 6-வதாண்டு தொடக்கமாகின்றதென்னும் விஷயம் தாங்களறிந்ததேயாகும். நிற்க, சென்ற ஆண்டில் **சண்பகவிஜயம்** என்னும் நாவலை வெளியிட்டதுபோல இவ்வாண்டிலும் ஓர் தனி நாவலை வெளியிடவேண்டுமென்று நமது நேயர்களில் பலர் நம்மைக் கேட்டுக்கொண்டு ஊக்கியதன்மேல் சென்ற மீ நமது மோகினியின் ஒன்பதாவது இதழை முன்னதாக அனுப்பிவிட்டு ஓர் தனி நாவல் எழுதத்தொடங்கி அந்நவீனகத்திற்கு, "**கௌரீமுகுந்தன்**" என்ற நாமம் சூட்டி அதனை எழுதி முடித்திருக்கிறோம்; அதில் பெரும்பாகம் அச்சாகியும்விட்டது. இன்னும் 10—15 தினங்களில் அதன் வேலை பூர்த்தியாகும்; அதன்மேல் அப்புத்தகம் விற்பனைக்குத் தயாராகிவிடும். இதில் அழகிய மூன்று சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன; இது சுமார் 300 பக்கங்களுள்ளது; இதன் விலை 1—12—0 சந்தாநேயர்கட்கு இதனைத் தபால்கூலியுள்பட 1—8 க்குக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

### புதிய ஆண்டுப் பரிசு.

புது வருஷ சந்தாவை டிசம்பர் மீ 20 தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு 6 பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம் :—

| | | | |
|---|---|---|---|
| முதல்பரிசு | ரூ. 25. | 3-வது பரிசு | ரூ. 10. |
| 2-வது பரிசு | ரூ. 15. | 3 பரிசுகள் | ரூ. 5. |

**ஐந்து** சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை **இனாமாக** அனுப்புவோம். அவர்களும், ஏஜண்டுகளும் ஷை **பரிசுப் போட்டியில்** சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

நமது நாவல்களின்மீதும், நாவல் சஞ்சிகைகளின் மீதும் போன்புவைத்த பேரறிஞரும், தமிழபிமானமுள்ள மற்ற புத்திமான்களும் எமக்குத் தங்களுடையஅன்புநிறைந்த உதவியைச்செய்யமுன்வந்து ஆறுவதாண்டின் சந்தாப்பணத்தையும், மேற்கூறிய புதிய நாவலின் கிரயத்தையும் அனுப்பி நம்நாவல் சஞ்சிகையையும், புதிய நாவலையும் வரவழைத்து நமக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உண்டாக்குமாறு தங்களை மிகவும் வணக்கத்துடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்

தங்கள் ஆதரவை எதிர் நோக்கும் :

**வை. மு. கோதைநாயகி.**

# கௌரீமுகுந்தன்

இப்பெயர்கொண்ட ஓர் இனிய தமிழ் நவீனம் **ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி** யம்மாளால் வரையப்பட்டு வெளிவந்துள்ளது. இப்புத்தகத்தில் சகோதரசகோதரிகளின் உயரியவாஞ்சையின் இயற்கையும், உத்தம அரசாங்கத்தின் சத்திய ஆட்சிமுறையும், செங்கோல் மன்னரின் சிறந்த தயாளகுணமும், உத்தம ஒழுக்கமும், **சரோஜாமணி, மனோகரன்** ஆகிய இருவருடைய சரித்திர விநோதமும், மனோகரனின் பரோபகாரச் செய்கைகளும், கடவுள் பக்தியும் வெகு அழகாக விளக்கப்பட்டிருக்கின்றன; இதனைப்படிக்கும்போது கல்மனமுங்கரைந்துவிடும்; படிப்போர்க்கு அளவற்ற ஆனந்தம் அடிக்கடியுண்டாகும்; சகோதரவாஞ்சை அதிகரிக்கும்; சற்குணங்கள் மிகும். இது பெண்மணிகளுக்குக் கண்மணிபோன்றது; அமுதச்சுவை பொருந்திய செந்தமிழ் நடையில் அமைந்தது; அழகிய 3 சித்திரப்படங்களுடன் கூடியது. சுமார் 300 பக்கங்களைக்கொண்டுள்ளது. விலை ரூபாய் 1—12—0

**வத்ஸா கம்பெனி,**

திருவல்லிக்கேணி சென்னை.

---

## பரிசுகளின் விவரம்.

8-9-வது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா நம்பர்.

2798. G. V. Krishna Row. Erode.

2872. N. Venkatrama Iyer. Tiruvanaikoil.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

---

### குறிப்பு.

சென்ற மாதத்து (ஆகஸ்ட்-9வது இதழ்) சஞ்சிகையை 8-வது (ஜூலை மீ) சஞ்சிகையுடன் முன்னதாகவே அனுப்பியிருந்தும் சிலர் ஏன் இன்னும் சஞ்சிகை வரவில்லையென எழுதுவது வியப்பாயிருக்கிறது. இப்பொழுதேனும் அவர்கள் நாம் சஞ்சிகையை ஒழுங்காக அனுப்பி வருகிறோமென்பதை கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

## ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | 7 | 8 | கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மாயாவிநோதப் பரதேசி 1,2 | 5 | 0 | மேனகா 1,2 | 3 | 0 | வித்யாஸாகரம் | 1 | 4 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | விலாஸவதி 1,2 | 3 | 0 | திவான் லொடபட சிங் பகதூர் | 0 | 12 |
| காளிங்கராயன் கோட்டை ரகசியம் 1,2 | 4 | 0 | பாலாமணி | 2 | 8 | மாணிக்க வாசகர் | 0 | 8 |
| | | | சௌந்தரகோகிலம் 1,2,3 | 6 | 0 | வஸந்தகோகிலம் | 1 | 0 |
| | | | கனகாம்புஜம் 1, 2, | 2 | 12 | மாயசுந்தரி | 0 | 12 |

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

## “ கிருஷிகன் ”

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் “ கிருஷிகனு ”க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

“ கிருஷிகன் ” பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் “ கிருஷிகன் ” ஆபீஸ்,
“ ஜகந்நாதபாக் ” சைதாப்பேட்டை, சென்னை.

## கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

## கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. ரெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

**முதல் ரகம்** விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

**கோட்டடி:** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

**ஸிட்டி நெசவுச் சாலை,**
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

உ

ஓம்

# ஜகன் மோகினி

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.



| மலர் V | விபவஹு புரட்டாசிமீ<br>September 1928. | இதழ் 10 |
|---|---|---|



## கடவுள் வணக்கம்

திருமகள் பஞ்சகம்.

1. செந்தா மரையுறையுஞ் சேயிழையே மாதவன்றன்
அந்தா ரகலத் தமர்ந்தருளி—நந்தாது
மூவுலகுங் காக்கும் முழுமணியே நின்புகழென்
நாவகமே நின்றிடநீ நாடு.

2. பூவுறையு மின்னைப் பொருகடலிற் பள்ளிகொளும்
தேவுறையு மார்பிற் செழுமானை—மேவும்
அமுதத் தெழுந்தருளு மன்னத்தைப் பொன்னைக்
குமுதத் திருமொழியைக் கூறு.

3. வஞ்ச மொழிந்து வளங்குலவு சேவடியென்
நெஞ்ச முறைய நினைகுவாய்—கஞ்சத்
திருந்துலக மீன்ற விளையோ யனங்கன்
அருந்தாயே யென்னை யளி.

4. நெஞ்சக் கவலை யொழிக்க நினையாயோ
கஞ்சத் துறையுங் கனங்குழாய்—அஞ்ச
நடையுகந்த வாள்விழியாய் நாயேன் மனத்தின்
இடையுகந்து நிற்க விரங்கு.

5. வெற்பினால் விண்ணோர் விரைந்து கடல்கடையப்
பொற்பி னுதித்தருளும் பொற்கொடியின்—நற்புகழைக்
காதாரக் கேட்டுக் கருத்திற் கமலையின் பொற்
பாதார விந்தம் பணி.

—வீரராகவ கவி.

# அநுபவ நீதிசாரம்.

71. அன்பெனும் பொருளின் தன்மையை இத்தன்மையதா யிருக்கும் என்று விளக்கிக் காட்டுதல் இயலாது; மனிதர் தம் சிநேகிதரிடமோ, உறவினரிடமோ, கணவனிடமோ, மனைவி யிடமோ,குழந்தைகளிடத்திலோ விசுவாசம் செலுத்துங்காலத்தில் அந்த அன்பின் இயற்கையும், இன்பமும் அவரவர்க்கும் தாமே விளங்கும்.

72. பெண்மணியே! உன் கணவனுக்கு எந்தெந்தப் பண்டங்களில் விருப்பம் என்பதைக் குறிப்பா லறிந்து அவற்றைத் தயார் செய்து அவனுக் களித்துவா; அவனுடைய பூரணமான அன்பைப் பெறுவதற்கு இஃதோர் சிறந்த வழியாகும்.

73. சகோதரியே! பல தினங்களாக உன்னை விட்டுப் பிரிந்திருக்கும் உன்னுடைய சிநேகிதை உன்னிடம் வரப் போவதாக உனக்குக் கடிதம் வந்தால், அக் கடிதத்தைக்கண்டதும் உன்னுடைய ஆநந்தம் அளவு கடந்து பொங்கி யெழுகின்றது; நீ, "அவள் வந்ததும் அவளுடன் எவ்வளவோ விஷயங்களைப் பேசவேண்டும்; அவளுக்கு எத்தனையோ உபசாரங்கள் செய்ய வேண்டும்" என்று நினைத்துப் பூரிப்படைகிறாய்; குறித்த நேரத்தில் அவள் வந்ததும், அவளைக் கண்ட உடனே, "பிரிந்தவர் கூடினால் பேசவும் கூடுமோ" என்ற பழமொழிப்படி, நீங்கள் நெடு நாட்களாகப் பிரிந்திருந்து கூடியதால், இடையில் அடங்கி யிருந்த பிரிய முற்றும் ஏக காலத்தில் திடீரெனக் கிளம்ப நீ மிதமிஞ்சிய ஆநந்தத்தினால் பேசுவதற்கும் வாய் வராமல் ப்ரமை யடைந்து நிற்கின்றாய். இக் குணம் உத்தமர்கள் ஒவ்வொருவரிடத்திலும் இயல்பாயுண்டாகும்; இது ஓர் அனுபவம்; இக்குண மில்லாத ஜன்மம் பயனற்றதாம்.

74. நீ எங்குச் சென்றாலும், எதைச் செய்தாலும், என்ன சொன்னாலும் இடம், காலம், சமயம் மூன்றும் பார்த்து அவற்றைச் செய்யவேண்டும்.

75. ஓர் மனிதனுடைய ஜீவியகாலத்தில் என்றும் தெவிட்டாத இன்பளிக்கும் பொருள்-கடவுளின் சொரூபமும், பகவானுடைய ஸ்தானமுமாகிய சங்கீத மேயாம். அதற்கே தெவிட்டாத் தன்மை யுண்டு.

76. பிறருடைய எப்பொருளையும் உன் விழியால் நோக்காதே; அவ்விதம் நோக்கினும் அவற்றில் உன் மனத்தைச் சிறிதும் செலுத்தாதே.

77. பரிசுத்தமென்பது முதலில் மனத்தில் ஏற்படவேண்டும். பிறகே தேகம், துணி, பாத்திரம், வீடு முதலியவற்றை நீ பரிசுத்தம் செய்யவேண்டும்.

78. நீ படிக்கும் புத்தகங்களெல்லாம், நான் இத்தனை புத்தகங்கள் படித்தேன், என்று கணக்கிடுவதற்காக ஏற்பட்டவை யல்ல; அறிவை விருத்தி செய்துகொள்வதற்கே ஏற்பட்டனவாம். எந்தப் புத்தகத்திலும் உனது அறிவைத் தெளிவாக்கக் கூடிய விஷயம் அணுவளவேனு மிருக்கும். அதை ஆராய்ந் தறிந்துகொள். இதுவே புத்தகப் படிப்பின் பயனும்.

79. உன்னுடைய உறவினரின் வீட்டிற்கு நீ சென்றால் அங்குள்ள சாதக பாதகங்களைக் கவனித்தலே கூடாது. அவ்விதம் கவனிப்பினும் அவற்றை நீ வெளியிடாதிருப்பதே உனக்குப் பெருந்தன்மையை உண்டாக்கும்.

(தொடரும்)

வை. மு. கோ.

182849

## விகடத்துணுக்குகள்.

1. என் தலையில் ஈரும் பேனும் நிரம்பி இருக்கிறபடியால் என் மனைவி எனக்கு இலை போட்டுச் சோறிடுவதற்கு அருவருப்புக்கொள்கிருள்; அந்தப் பேனும் ஈரும் தொலைய நான் எத்தனையோ மருந்துகளும் தைலமும் போட்டும் ஒழியவில்லை. ஆகையினல் இந்தத் தலையை எடுத்துக்கொண்டு வேறு சுத்தமான தலையைத் தானமாக வாங்கி எனக்குக் கொடுக்க ஓர் தர்மவான் தேவை; தலை தருவோர் இருக்கு மிடத்தைக் காட்டுவோருக்கு எனது பழய தலையின் ஈரையும் பேனையும் ஒன்று விடாது இனமாக மயிருடன் அதைத் தந்துவிடுகிறேன். இதற்கு முன்வரும் நண்பர்கள் அடியில் காணும் விலாசத்திற்கு வந்து என்னைக் காணவும்.

மந்தமதி மூளையூர்
**வயா பேனண்டி யப்பன்.**

2. எனது இளங்காதலியும், நானும் இராக் காலத்தில் உல்லாசமாக விருக்கையில் சந்திரனை அடிக்கடி மேகம் என்னும் வியாதி வந்து மறைத்து உபத்திரவிப்பதால் எங்களுடைய உல்லாசம் பங்கமடைவதோடு சந்திரனும் நோயாளியாகிருன். சந்திரனுக்கு மேக நோய் அணுகாதிருக்கும்படி செய்ய ஓர் பிரபல வைத்தியர் உடனே தேவை; தகுந்த மருந்து கொடுத்து இம் மேகத்தை நிவர்த்தித்தால் அனேக நக்ஷத்திரங்கள் அவருக்கு இனம் அளிக்கப்படும்.

விலாசம் :—ஸரஸ உல்லாஸன்,
பானுபுரி
தாரகை போஸ்டு.

### ஓர் பிராது.

3. கோயில்களிலுள்ள சுவாமிகளைப் பட்டாச்சாரி மட்டும்தான் தொடலாம், மற்றையோர் தொடலாகாதென்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றதைச் சற்றும் லக்ஷியம் செய்யாத கரப்பான்பூச்சிகள் என்ஞெரு வகைக் கூட்டத்தார் உத்தரவின்றி உட் புகுந்து சுவாமி மீது ஏறி உலாவுகிருர்கள். அந்தத் திருட்டை நான் கண்டுபிடித்துவிட்டேன். கனம் போலீஸார் அவர்கள் உடனே அந்தக் கூட்டத்தாரைப் பிடித்துக் கைது செய்ய வேண்டி அவர்களுக்கு இம் மனுவை அனுப்புகிறேன். இதை அங்கீகரிப்பார்களாக.

இங்ஙனம்
டுலெட் ஹெட்மென்
**களிமண்புரம்.**

4. ஓர் பெரிய பிரபுவிற்குத் தினம் மணிக்கு மணி எவ்வளவு ஆகாரம் படைத்தாலும் வயிறு நிறைவதில்லையாம்; எப்பொழுதும் பசி யெடுத்துக் கொண்டே யிருக்கிறதாம். ஆகையால் சைகில், மோட்டார் முதலியவற்றின் சக்கரங்களுக்கு நிறையக் காற்று ஏற்றுவதுபோல் இந்தப் பிரபுவின் வயிற்றிற்குள்ளும் நிறையக் காற்றை யடைத்துவிட்டால் வீட்டி லுள்ளோரை இம்சிக்காமல் தூங்கச் செய்வாராம். ஆகையினல் ஆகாரக் காற்றேற்றும் அதிசயக் குழாய் செய்து தருவோர்க்கு கிரிஸனுயில் (பம்பு) குழாய் இனமாக ஒரு வாரத்திற்கு அளிக்கப்படும். உடனே எழுதவும்.

வயிறுபெருத்தான் தேவர்
வாயடைத்தான் பேட்டை
தொந்தி போஸ்டு.

**வை. மு. கோ.**

# சந்திர மேனகா

By

**கமலவாஸன்**

ஒரு இனிய தமிழ் நாவல். ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தையும் மயிர்க் கூச்சையும் உண்டாக்கக் கூடியது. படித்துக் கிழே வைக்கும் வரைக் கும் படிப்போர் மனதைக் கவரத்தக்கது. **மதுரவேணி** இறக்கும் தருவாயில் **தாராவதி** க்குப் போதித்த நற்குணங்களும், **புஷ்பாவதி மேனகாவை** அவளுடைய தம்பியையே மணக்கும்படி செய்த சூழ்ச்சிகளும், **சந்திரன்** மேனகாவை அடைவதற்காகப் பட்ட கஷ்டங்களும், தன்னைக் காட்டிக்கொள் ளாமல் தாராவதி மேனகாவுக்குச் செய்த உதவிகளும் ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியவை விலை அணா 8.

**விலாஸம்:—எஸ். கே. ஸ்வாமி, 1086 மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.**

பின் கூறப்படும் இடங்களில் புஸ்தகம் கிடைக்கும்.

1. M. நடன சுந்தரம் Bros, புது மண்டபம், மதுரை.
2. டி. எம். வி. பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி.
3. ஹனுமான் வர்த்தக சாலை, ராயப்பேட்டை. ஹைரோட், மைலாப்பூர் சென்னை
4. ஏ. வீ. ஸ்ரீனிவாஸ அய்யர், 30 முதல் தெரு, மன்னார்குடி.
5. N. இராமபத்திர அய்யங்கார், மேல மேட்டுத்தெரு கும்பகோணம்.,

---


ஒரு மாதம்

## பாதிவிலை! பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.


பாதி விலை 7



ஸ்வான் ஹவுஸ்.

தபால் நெ, 508, பி, டி, மதராஸ்.

22 காரட் ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 10 வருஷம் உத்தரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும் இக்கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப்படும். பாதிவிலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பிவைக்கப்படும்.




[Page 397.

# 12—வது அதிகாரம்.

## மண்டைக்குவந்த ஆபத்து கொண்டையுடன் நீங்கியது

9-வது அதிகாரத்தினிறுதியில் கூறியபடி நம் உத்தம குண மடந்தையான மரகதவல்லி, அங்கு வந்த கிழவிக்கு உதவி புரிய எண்ணி அவள் வைத்திருந்த கூடையை வாங்கிக்கொண்ட காருண்ய குணம் பொருந்திய செய்கையானது அவளுக்கு நேர் விரோதமாகப் பேராபத்தை உண்டாக்கிவிட்டதைக் கண்டதும் அவளுடைய சர்வாங்கமும் சோர்வுற்று உயிரற்ற சவம்போலாகி, மூர்ச்சித்து நிலத்தில் விழுந்துவிட்டாள்.

அவ்வாறு காம்பொடிபட்ட தாமரைமலர்போல துவண்டு பூமியில் விழுந்துவிட்ட மரகதவல்லியைக் கண்டு அங்குள்ளோர் யாவரும், மிக்க பரிதாபத்தை யடைந்து, "ஆகா! இவளுடைய வதனம் எத்தகைய எழில் நிறைந்ததாகக் காணப்படுகின்றது! அடாடா! பால் வடியும் முகம் என்பது இந்த மடந்தையர் மாமணியின் முகத்துக்குத்தான் தகும்; இவளுடைய முகத்தை நோக்குங்கால் அதில் சாந்தமென்னும் குணம் ததும்பி வழிகின்றதே! இத்தகைய மாதரசி எவ்விதந்தான் மனந் துணிந்து இக்கொடிய விபரீதச் செய்கைக்கு உடன்பட்டாளோ தெரியவில்லையே!" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். சிலர் அவளுடைய தேக அழகையும், முகத்தில் ஜொலிக்கும் வசீகரத் தன்மையையும் கண்டு வியந்து, "இவள் இத்தகைய கடுஞ் செயல் புரிந்திருக்கவே மாட்டாள்" என்றும் பேசிக்கொண்டார்கள்.

கிழவியோ தான் ஒன்றையு மறியாத பரம சாதுவைப்போல நடித்து, "ஐயோ! பாவி! படுபாவி! இதென்ன ஜாலவித்தை செய்கிறாள்! செய்த காரியத்தைப் பலமாகச் செய்துவிட்டுப் பாசாங்குத் தனமாகக் கீழே விழுந்துவிட்டாளே! இவள் இப்படிப்பட்ட திருட்டுக் கள்ளி என்பது எனக்குத் தெரியாதே! இவள் வழித் துணைக்காக என்னைக் கூட வரும்படி கூப்பிட்டாள்; அதனாலல்லவோ

நான் கூடவந்தேன்; இவள் காரியம் இப்படியா இருக்கிறது!" என்று ஓர் கட்டுக் கதையைக் கூறி மரகதமணியை முறைத்து விறைத்துப் பார்த்தாள்.

இவள் இவ்விதம் கூறியதைக்கேட்ட அங்குள்ளோரில் சிலர், கிழவியின் கன்னத்தில் மீண்டும் பளீர் பளீர் என்று சுடச் சுட இரண்டு அறை விட்டு, "ஏ! கிழட்டுப் பிணமே! நீ என்ன சொன்னுய்? இந்த அம்மாளுக்கு வழித் துணையாக வந்தாயா! எங்கள் முகத்தைப் பார்த்துக்கூறு; நீ சற்று நேரத்திற்கு முன் கலியாணசுந்தர முதலியாரின் வீட்டில் கத்தரிக்காயையும், அவரைக்காயையும் கூடையுடன் கொணர்ந்துபோடவில்லையா? அவ்விதம் போட்டுவிட்டு அங்குள்ள குழந்தையை நீ எடுத்துக்கொண்டு மறைந்து மறைந்து திரும்பிப் பார்த்தபடியே ஓடிவரவில்லையா! உன்னை அவ்விடத்திலிருந்தே நாங்கள் பின்தொடர்ந்து வருகிறேமே! அப்பேர்ப்பட்ட எங்களுடைய கண்ணில் மண்ணைத் தூவி எங்களை ஏமாற்ற எண்ணுகிறுய்போலும்! நீ உண்மையைச் சொல்லுகின்ருயா, இல்லையா? நீ கூடையுடன் அவ்வீட்டிலிருந்து வெளிப்பட்டதை யாங்கள் கவனிக்கவில்லை என்று எண்ணுதே; இந்த அம்மாள் யார்? இவர்கள் தலையில் நீ கூடையை எவ்விதம் வைத்தாய்? நிஜத்தை யுரைத்துவிடு" என்ருர்கள்.

அதற்குள் கூடைக்குள்ளிருந்த குழந்தை கண் விழித்துக் கொண்டு சிரிக்கத் தொடங்கியது. அக்குழந்தையைச் சேர்ந்த மனிதர்கள் உடனே அதை வாரி எடுத்துக்கொண்டு, "ஆகா! உனக்கு வந்த ஆபத்து நீங்கியதா! எங்கள் செல்வா!" என்று கூறிக் கொஞ்சலானுர்கள். இதற்குள் போலீஸ்காரர்களும் அக்குழந்தையின் தாய் முதலிய பெண்பிள்ளைகளும் அவ்விடத்தில் வந்து கூடினுர்கள். அவ்விதம் வந்து கூடியவுடன், போலீஸ்காரர்கள் கிழவியைப் பிடித்துப் பயமுறுத்தி நடந்தவற்றை ஒளியாமல் கூறும்படி கேட்டார்கள்.

அதைக்கேட்ட கிழவி, மரகதத்தின் முகத்தைப் பார்த்தபடியே, "ஐயோ! இந்த அம்மாள் சொல்லவேண்டாமென்று

சொல்லியிருக்கிறாளே; நான் என்னசெய்வேன்! ஐயா! நான் காய் கறி விற்கிற கூடைக்காரி; நான் வழக்கம்போல இன்றைக்கும் கூடையிலே காய் கறிகளை எடுத்துக்கொண்டு விற்பதற்காக வந்தேன்; அப்போது இந்த அம்மா என்னை நோக்கி, இந்தக் குழந்தை தனக்குச் சொந்தக்காரரின் குழந்தை என்றும், இதை, அந்தச் சொந்தக்காரர்கள் தனக்குக் காட்டுகிறதில்லை யென்றும், ஆதலால் இதைத் தான் பார்ப்பதற்காக ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டுவந்து தன்னிடம் கொடுக்கவேண்டுமென்றும் தெரிவித்தாள்; நான் அதை உண்மை யென்று நம்பி இக்குழந்தையை எடுத்துவந்து இந்த அம்மாளிடம் கொடுத்தேன்; மற்றபடி எனக் கொன்றும் தெரியாது" என்று ஆகாயப் புளுகு புளுகினாள்.

இதற்குள் அங்குள்ள ஓர் வயது சென்ற கிழவன், நம் மரகதத்தினிடத்தில் மிகுந்த பரிதாபம் கொண்டவனாய், அவளுடைய மூர்ச்சையைத் தெளியவைத்து அவளை எழுந்திருக்கச் செய்தான். மரகதம் மூர்ச்சை தெளிந் தெழுந்ததும் மெல்லக் காற்றி லசையும் மாந் தளிர்போல அசைந்து நின்று, அங்குக் கூடியுள்ள மனிதர்களை ஏற இறங்க ஓர் முறை பார்த்தாள். அந்த ஜனங்கள் பல மாதிரியாகப் பேசியதைக் கேட்டு தனக்குள் மிகுந்த கிலேசத்தை யடைந்து வருத்த மேலீட்டால் தலை குனிந்தபடியே நின்றாள். அப்போது கிழவி போலீஸாரிடம் கூறிய செய்தியை அவர்கள் மரகதமணியிடம் சொன்னார்கள். அதைச் செவியுற்ற மின்னிடை மாதரசியாகிய மரகதவல்லியின் நெஞ்சம் துடித்து நடுக்கலுற்றது. அவள் வாய் திறந்து பதில் பேசாது அப்படியே பதுமைபோல நின்றுவிட்டாள்.

அதன்மேல் போலீஸ்காரர்கள், மரகதமணியை நோக்கி, "அம்மா! இக்குழந்தையைத் தாங்கள் கொண்டுவரச் சொல்லியது உண்மைதானா? கிழவி கூறிய வார்த்தைகள் யாவும் நிஜந்தானா? நடந்ததைக் கூறுங்கள்" என்றார்கள்.

இதைக்கேட்ட மரகதவல்லி தாங்கவியலாத கலக்கமும், துக்கமும், மிகுந்த லஜ்ஜையும் அடைந்து, தலை குனிந்தபடியே பேசத்

தொடங்கி, "ஐயா! இந்தக் கிழவி யாரோ இவளை யானறியேன்; இக்குழந்தையும் யாருடையதோ எனக்குத் தெரியவராது; என்னுடைய சொந்த வேலையாக நான் இவ்வழியே சென்றுகொண் டிருக்கையில் இந்தக் கூடையைத் தலைமீது தாங்கி இக் கிழவி மிகுந்த சிரமத்துடன் சென்றாள்; இவளுடைய பரிதாப நிலைமை யைக் கண்டு நான் மனதிரங்கி இக் கூடையை இவளிடமிருந்து வாங்கிச் சுமந்துவந்தேன்; ஆனால் கூடையில் குழந்தை யிருந்ததை, யான் கடவுள்மீது ஆணையாக அறியேன்; இக் கிழவி தன் தம்பிக்கு பிரமாதமான தேக அசௌக்கிய மென்றும், அதற்குக் கஷாயம் வைத்துக்கொடுக்கவேண்டிய மருந்துச் சரக்குகளை வாங்கி இக்கூடையில் நிரப்பிக்கொண்டு செல்வதாகவும், இதைத்தூக் கிக்கொண்டு நடக்க முடியவில்லை என்றும் என்னிடம் சொன்னாள்; அவ்வாறு சொல்லியதன் பேரில்தான் இதை நான் வாங்கி என் தலையில் வைத்துக்கொண்டேன்; இவ்வளவுதான் எனக்குத்தெரி யும்; மற்றப்படி ஒரு பாவத்தையும் யானறியமாட்டேன்" என்று கண்ணீர் பெருகக்கூறினாள்.

இதைக்கேட்ட போலீஸாரும், மற்றவர்களில் சிலரும், "அடா டா! என்ன காருண்யம் பாவம்! வழியோடு செல்லும் கிழவிக்குச் சிரமம் தீருவதற்கு நீ உதவி செய்தாயோ! 'ஆடு நனைகிறதென்று கோனாய் குந்தியழுததாம்' என்பதைப்போலல்லவா இருக்கிறது நீ சொல்வது! வழியோடு போகிற இக் கிழவியின் மீது உனக்குத் திடீரென்று அத்தனை கருணை பிறந்துவிட்டதோ! ஐயோ பாவம்! பேஷ்! சொல்வதையும் வெகு ஒழுங்காகச் சொல்கின்றாயே!" என்று நிரம்பவும் ஏளனமாகவும், அலக்ஷியமாகவும் கூறினார்கள்.

அந்தோ! இச் சொல்லைக் கேட்டதும் நம் மரகதவல்லியின் மனம் அப்போது பட்ட பாட்டை நம்மால் விவரித்தல் முடியாது; அவளுடைய உயிர் அப்போது அவளது தேகத்தைவிட்டுச் செ ன்று கொண்டிருக்கின்றதென்றே அவளைப் பார்ப்போர் தீர்மானிக் கும் படி அவள் மெய் சோர்ந்து தள்ளாடி நின்றாள்; அவர்கள் கூறிய வார்த்தைகளுக்கு அவள் வாய்திறந்து எதுவுமே பதில் கூற வில்லை. அதன் மேல் போலீஸ்காரர்கள் கிழவியை மீண்டும் நோக்கி, "ஏ

பாட்டி! இந்தக் கேஸில் நீங்களிருவருமே சம்பந்தப்பட்டிருக்கின்றீர்களென்பது தெளிவாகத் தெரிகின்றது; உண்மை இன்னது என்பதை நீ தெளிவாகக் கூறு; இல்லாவிடில் துன்பப்படுவாய்'' என்றார்கள். இதற்குள் குழந்தையின் சொந்தக் காரர்கள், "ஆகா! இக் கிழவிதான் எங்கள் வீட்டிற்கு வந்தவள்; கிழவி சொல்லியபடி இந்த மங்கை எங்களுக்கு உறவினளேயல்லள்; இவளை நாங்கள் எப்போதுமே பார்த்ததில்லை; இந்தப் பெண் சொல்வதே உண்மை என்று திட்டமாய்த் தோன்றுகின்றது; கிழவி சொல்வதில் முழு மோசம் பொருந்தியிருக்கின்றது; ஆகையால் இப் பெண்மணியை விட்டு விடுங்கள்'' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட கிழவிக்குக் கோபம் அதிகரித்தது; அவள் கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன; அந்நிலையில் அவள் எல்லோருக்கும் கேட்கும்படி மரகதவல்லியை நோக்கி, "அடிபாவி! சண்டாளி! என்னுடைய தள்ளாத காலத்தில் நீ என் தலைக்குக் கல்லைத் தேடி வைத்து விட்டாயடி! நாசகாலி! நீ இவர்கள் உனக்குஉறவென்று சொல்லி, இக் குழந்தையை நான் தூக்கி வரும்படிச் செய்து என்னை இவ்வாறு பழிக்கும் பாவத்துக்கும் ஆளாக்கி விட்டாயே! நான் புத்திகெட்ட கிழச்சவமானதாலல்லவா நீ சொன்ன பேச்சைக் கேட்டுச் சிறிதும் யோசனையின்றி இந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டுவந்தேன்; என்னைச் சந்தியில் இழுத்து விட்டு நீ தப்பித்துக் கொள்ளும் மார்க்கத்தைத் தேடிக் கொண்டாயே! அடி கள்ளி! கபடீ!'' என்று கூறி வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு கோவென அழத் தொடங்கினாள்.

அவள் செய்த இத்தகைய பாசாங்கைக் கண்ட சிலர் அக் கிழவி மீது இரக்கங்கொண்டு, "ஐயோ! பாவம்! தள்ளாத காலத்தில் கிழவி இவ்வித கொடிய செய்கையைத் தானே புரிய மாட்டாள்; அவளுடைய வறுமையின் கொடுமையால் இந்தக் காரியத்தைத் தீமை என்றுணராமல் ஒப்புக்கொண்டிருக்கக் கூடும்; இதை இக் கிழவி, தானாகத் துணிந்து ஒரு போதும் செய்திருக்கமாட்டாள்'' என்று அக் கிழவி பக்கம் பரிந்து பேசினார்கள்.

அதற்குள் போலீஸார் எல்லோரையும் பார்த்தபடியே, "உம்; இங்கு நமக்கு எது உண்மை என்பது விளங்காவிடினும் இருவரும் இக் குற்றத்தில் கலந்திருக்கிறார்கள் என்பது வரையில் திட்டமாக விளங்குகின்றது; ஆதலால் இருவரையும் எங்கள் சட்டப்படிக்கு நாங்கள் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகிறோம்; அங்கு உண்மை தானே வெளிப்பட்டு விடும்" என்று கூறியபடி மரகதவல்லியின் கரத்தைப் பற்ற முயன்றார்கள். அத்தருணம் அந்த மாதுசிரோமணி அபாரமான துயரத்தை யடைந்தவளாய் அவர்களை நோக்கி, "ஐயன்மீர்!! தாங்கள் என்கரத்தைப்பற்றி இழுத்துச் செல்ல வேண்டாம்; என்னை இத்தகைய விபரீதமான ஆபத்தில் சிக்க வைக்க இங்கு இழுத்துக் கொண்டு வந்த எனது ஊழ்வினை தங்களைப் பின்னும் இழுத்துக்கொண்டு வரும்," என்று கூறிய படியே கண்ணீர் உதிர்த்தாள்.

அத்தருணம் அவர்கள் நின்ற சாலையின் ஓரத்தில் தழைந்த ஆல விருக்ஷத்தின் மீது ஏறி இலை பறித்துக் கொண்டிருந்த ஓர் குடியானவனும், எதிர்ச் சாரியில் நின்ற பனைமரத்தில் கள்ளிறக்கிக் கொண்டிருந்த சாணானும் மரத்தை விட்டுக் கீழே இறங்கிப் போலீஸாரின் முன்னால் ஓடி வந்து, "ஐயா! ஒலகத்திலே அல்லாருக்கும் நீதி சொல்லும் நீங்க நீதி தவரியா நடக்கிறீங்க! நாங்கரெண்டு பேரும் இந்த மரத்துலே சேனு நேரமாய் எலைபுடுங்கிக்கினும், கள்ளு எறக்கிக்கினும் இருந்து இங்கே நடக்கர சகலசங்கதிங்களேயும் பாத்து கிட்டே இருக்கரம்; இந்தப் பொம்பிளெங்க சங்கதி என்னன்னு தான் நடக்குண்ணு பாப்போமின்னு சும்மா இருந்தோம்; இந்த கெயவிதான் மொதல்லே இந்தக் கூடையே எடுத்தாந்தா; அப்பாலே வயியோடு அயுதுக்கிணே வந்த இந்தம்மா அந்தக் கூடையெ வாங்கிக்கினு; அப்போது கெயவி தன்னொடதம்பிக்குச் சிக்கு அதிகமுண்ணாம், அதுக்குக் கசாயம் போட வாங்கின சாமான் இதுலே இக்ராதுண்ணும், அதெ ரவெ சடுதியா எடுத்துக்கினு போகணும் இன்னு அந்தப் பொன்னுகிட்ட சொன்னதேயெல்லாம் நாங்க கேட்டுக் கிட்டே இருந்தோம்; இந்த கெயவி பக்கா பேர் வழியாச்சே! போன வருசத்திலே கூட ஒரு கொயந்தை

யின் கைக் காப்பெ இந்த கெயவி கயட்டிக் கிணு அதிகாரிங்க விசாரிக்கையிலே ஒண்ணும் தெரியாதுண்ணு சாதனே சொல்லிப் புட்டா; அப்பாலே அந்த கொயந்தெயே இவளே அடையாளங் காட்டிச்சி; அதுக்கு மேலே இவளுக்குப் போலீஸ்காரரு தண்டனே விதிச்சி அவதாரம் பொட்டாங்க; இந்தச் சேதி பக்கத்து ஊர்லே நடந்தது; நாங்களும் எலவிக்கவும், கள்ளுவிக்கவும் அல்லா ஊருக்கும் போரவங்க; இவளெ நல்லா அங்கே பாத்தோம்; வீணுக்கு இந்த அம்மாளெ ஏன் ஐயா புடிச்சி எயவெடுக்கிறீங்க" என்று கூறிக் கிழவியை நோக்கி, "ஏ கெயவி! நீ பக்கத்தூரு ராமஸாமி நாயக்கர் ஊட்டுக் கொயந்தெ யுட காப்புத்திருடிப்புட்டபோது நாங்களும் அங்கே வந்திருந்தமே? எங்களே பாக்கலே! அது ஒனக்கு நினெவிலே இருக்குதா? இதோ எங்க மூஞ்சியேபாரு; ஒன்னே அல்லாரும் திட்டச் செலே நாங்களும் திட்டினமே! அது ஒனக்கு கவனமிருக்குதா?" என்று ஏளனமாகக் கேட்டார்கள்.

கிழவி இவர்களைக் கண்டதும் நடுக்கங்கொண்டு பதிலே பேச மாட்டாமல் தன் குற்றத்தை ஒப்புக் கொள்பவள் போன்ற நிலைமையை யடைந்து மதிமருண்டு தன்னை மறந்து, "ஆகா! அந்தச் சங்கதியை ஏன் இங்கே கிளப்புகிறீர்கள்!" என்று வாயுளறி விட்டாள்.

இதைக் கேட்ட வுடனே போலீஸாருக்கும், அங்கு நின்ற மற்ற எல்லோருக்கும் கிழவியே குற்றம் செய்தவளென்பது விளங்கி விட்டது. அந்தச் சாணுனையும், இலை அறுப்போனையும் போலீஸார் அவ்வழியே செல்கையில் பல முறைகள் பார்த்திருந்ததனுல் அவர்களை நன்ருக அறிவார்கள்; ஆகையால் அவர்களுடைய வார்த்தையை நம்பினுர்கள். குழந்தையின் சொந்தக் காரர்களுக்கு அங்குவந்த இலைக்காரனே இலை கொடுப்பதால் அவர்களும் அவனை நன்ருக அறிவார்கள். ஆதலால் அவன் கூறுவதை அவர்களும் நம்பினுர்கள். மற்ற எல்லோரும், "இவ்விருவரும் கூறுவது சரியாகவே யிருக்கும்" என்று கூறினுர்கள். பின்னர்க் கிழவியை போலீஸார் பிடித்துக் கொண்டார்கள். அகாரணமாக சந்தேகத்தின் பேரில் மரகதவல்லியைப் பிடித்துக்கொண்டு அனியாயமாகச் சில வார்த்தைகள் சொல்லி விட்டதைப் பற்றி அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர் எல்லோரும் மரகதவல்லியை அவளது வேண்டுகோளுக் கிணங்கி, விட்டு விட்டுக் கிழவியை ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு சென்றார்கள்.

'மண்டைக்கு வந்த ஆபத்து கொண்டையுடன் நீங்கப் பெற்றது' போல மரகதவல்லிக்கு வந்த ஆபத்து அவள் முதலிற் சிலரிடம் கேட்ட நிந்தனைச் சொற்களோடு நீங்கி விடவே அவள், "ஐயோ! இதுவரை நேர்ந்த துன்பங்களெல்லாம் போதாவென்று நமது தலையே போகக்கூடிய மலைபோன்ற இவ்வாபத்தும் வந்து நேர்ந்ததே; ஆயினும் கடவுள் இந்த இருவருடைய சாக்ஷியைக் கொண்டு அந்த ஆபத்தினின்றும், பழியினின்றும் நாம் நீங்கும்படி நம்மைக்காப்பாற்றினார்" என்று அவ்வாறு கருணைசெய்த பரம்பொருளுக்குத் தனது மனமார்ந்த பூர்ண பக்தியுடன் வந்தனத்தைச் செலுத்திப் பின் அவ்விடத்தை விட்டு மெல்ல நடக்கலானாள். தன் கணவனால் தனக்கு நேர்ந்த விஷயமே தன் மனத்தில் கண்ணாடியில் பிரதிபிம்பிப்பதுபோல தோன்றிக் கொண்டிருந்ததோடு அப்போது நடந்த விபரீதமான சம்பவமும்தோன்றி அவளை மிகுந்த வேதனைக் குள்ளாக்கிற்று.

அவள் அங்கிலைமையோடு வெகு தூரம் நடந்து தன் மனம் சென்றவாறு போய்க் கொண்டேயிருந்தாள். பசியின் கொடுமை மீண்டும் அவளைத் துன்புறுத்த ஆரம்பித்தது; வயிற்றிலுள்ள சிசுவினாலுண்டாகும் வேதனை யொருபுறம் அவளை வருத்திக் கொண்டிருந்தது. அத்துணைச் சங்கடங்களையும் சகித்துக்கொண்டு அவள் நடந்துசெல்லும்போது புகை ரதம் போகும் சத்தம் வெகு சமீபத்தில் அவள் செவிக்குக் கேட்டது. அச்சத்தத்தைக் கேட்டதும் அவளுக்கு ஓர் யோசனை தோன்றிற்று. அதாவது:—"நாம் நமது வீட்டை விட்டு எவரும் காணாமல் வந்துவிட்ட செய்தியை எப்படியும் நமது பர்த்தா தம்முடைய நண்பன் மூலமாக அறிந்திருக்கக்கூடும்; அவர் இவ்விஷயத்தை அவ்வாறு அறிந்ததும் நம்மீது தப்பான எண்ணங் கொள்ளக்கூடும்; அல்லது கடுமையான கோபங் கொள்ளக்கூடும்; அவர் எந்தவிதமான எண்ணங்கொண்டாலும் நம் பெற்றோருக்கும் இச்செய்தியைத்

தெரிவித்துவிடுவார்; அவர்கள் அவ்வாறு தெரிந்துகொண்டால் நம்மைத் தேடத் தொடங்கிப் போலீஸில் நம் விஷயத்தை எழுதி வைத்துப் பேப்பர்களிலும் பிரசுரித் திருப்பார்கள்; ஆதலின் போலீஸ்காரர் முதலியவர்கள் நம்மைத் தேடும் வேலையிலிருப்பார் கள்; நாம் எவ்வளவு துரிதமாக நடந்து வந்திருந்தாலும் சுமார் 15 மைல் தூரம்தான் கடந்து வந்திருக்கக்கூடும்; இவ்விடங்களி லெல்லாம் நம் சங்கதி பரவி யிருக்கும்; அதோடு நமக்குத் தற்செய லாக இங்கு நேர்ந்த ஆபத்தின் மூலமாக நம்மை இவ்வூர்ப் போலீஸார் களும், மற்றுமுள்ளோரும் பார்த்து ஏதோ மனவெறுப்பால் தனித்து வெளியேறி வந்தவளென்பதைத் தெரிந்துகொண்டிருக் கிறார்கள்; அதனால் நம் பெற்றோர்களாவது, கணவர் முதலியவர் களாவது போலீஸில் தகவல் கொடுத்திருப்பதைக் கொண்டு இங்கு நம்மைப் பார்த்த போலீஸாரும், மற்று முள்ளோரும் தேடத் தொடங்கினால் உடனே நம்மைக் கண்டுபிடித்துவிடக்கூடும்; ஆத லால் நாம் இந்தப் பக்கத்தையே விட்டு வெகுதூரமாயுள்ள கல்கத்தா, பாம்பே, காசி முதலிய விடங்களுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டால் மட்டும் நாம் முக்கியமாக இருக்கவேண்டிய— அதாவது கருப்பத்தை உத்தேசித்து இருக்கவேண்டிய—5 மாத காலம் வரை உயிரை வைத்திருக்கலாம்; அப்படிப் போகாமல் இவ்விடங்களில் இருப்போமானால் நாம் இருப்பதை நம் மனிதர்கள் கண்டுகொள்வதுடன், நமது மான மழிந்த பிழைப்பின் மர்மத்தை யும் தெரிந்துகொள்ள ஏது வுண்டாகும்; ஆகையால் நாம் உடனே இப் புகை வண்டி ஸ்டேஷனுக்குச் சென்று வண்டி ஏறும் மார்க்கத் தைத் தேடவேண்டும்" என்று அவள் எண்ணினாள். அப்படி யெண்ணியதும் அவ்விதமே செய்துவிடவேண்டுமென்று தீர் மானித்துப் புகைவண்டித் தொடர் ஆலயத்தை யடைந்தாள். அவ்வாறு சேர்ந்தவுடன், 'நாம் எவ்விதம் பிரயாணச் சீட்டுப் பெற்றுக்கொள்ளாது வண்டியில் ஏறக்கூடும்!' என்று எண்ணமிட்ட வண்ணம் அங்கு போடப்பட்டிருந்த பலகையில் உட்கார்ந்தாள். அவளுக்கு ஒரு யோசனையும் புரியவில்லை. அவள், புகைவண்டி யேறும் மார்க்கமே ஒன்றும் தோன்றாதவளாய்க் கல்லாய்ச் சமைந் திருந்தாள். அவ்விதம் உட்கார்ந்திருந்த அவளுக்கு ஒரு மார்க்கம்

தோன்றிற்று; அதாவது:—அவள் தன்னுடைய ஆபரணங்களை யெல்லாம் வீட்டில் கழற்றியபோது ரவிக்கையில் அணிந்திருந்த தங்கப் பொத்தானைக் கழற்ற மறந்துவிட்டாள். அது அவளுடைய திருஷ்டியில் பட்டது. உடனே அவள் அதைக் கழற்றினாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு கிழவனார் உட்கார்ந்திருந்தார். அவள், அவரிடம் அப்பொத்தானைக் கொடுத்து, "ஐயா! எனக்குத் தாங்கள் தயவுசெய்து இந்தப் பொத்தானை யாரிடமேனும் விற்றுப் பணம் வாங்கித் தரவேண்டும்" என்றுகூறி வேண்டினாள்.

அவளுடைய ஏழ்மை நிலைமையையும், அந்தப் பொத்தானின் உயர்வையும் கண்ட அக்கிழவர், அவள்மீது சந்தேகங்கொண்டு, அவளை நோக்கி, "ஏனம்மா! உன்னைப் பார்த்தால் நீ மிகவும் ஏழ்மை யான நிலைமையில் காணப்படுகிறாய்; உனக்கு இத் தங்கப் பொத் தான் ஏது?" என்று கேட்டார்.

மரகதவல்லி அதை அவரிடம் கொடுக்கும்போதே அவருக்கு இவ்வித சந்தேகம் தன்மீது ஒருவாறு பிறக்கக் கூடுமென்று நினைத் துக்கொண்டே கொடுத்தாள். நினைத்தபடியே, அவர் சந்தேகத்தை யடைந்து மேற்கூறியவாறு கேட்கவே, அதைக் கேட்டதும் அவள், தான் நினைந்தவாறே முடிந்ததை எண்ணி வருத்தப்பட்டவண்ணம் அவரை நோக்கி, "ஐயா! தற்போது என்னுடைய காலகதி தங்களைப்போன்றவர்கள் ;இவ்வித கேள்விகளைக் கேட்கும்படியான நிலைமையில் என்னை வைத்திருக்கிறது. நான், ஒரு திருடனுடைய கொடுஞ் செய்கையாலேயே தற்போது இந்நிலைமையை அடைந் தேன்; இதைக் கூறுவதற்கு வெட்கமாகவிருக்கிறது; நான் என் தேகம் நிறைய ஆபரணங்களை அணிந்துகொண்டிருந்தேன்; ஓர் சோரனால் அவைகள் களவாடப்பட்டன; என்னுடைய பெற்றோர்கள் வடக்கே வெகுதூரத்தில் இருக்கிறார்கள்; நானும் என் பாட்டியும் இவ்வூருக்கு ஓர் காரியமாக வந்தோம்; அவ்வாறு வந்தவிடத்தில் இத்தகைய சம்பவம் நேர்ந்துவிட்டது; என்னுடைய பாட்டி, அருகிலுள்ள எனது உறவினர் வீட்டில் பலத்த நோய்வாய்ப் பட்டுக் கிடக்கிறாள்; இதைவிற்றுப் பணந் தேடி அதைக்கொண்டு ஊருக்குச் செல்லவெண்ணி யான் இங்கு வந்தேன்; தாங்கள்

பெரியவரா யிருப்பதால் இதைத் தங்களிடம் கொடுத்தேன். தயவுசெய்யவேண்டும்'' என்றாள்.

அவளுடைய பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டவுடன் கிழவர் அவள் கூறுவலதை உண்மை என்று நம்பி, அந்தப் பொத் தானை, 'சுமார் அரைப் பவுனிருக்கலாம்' என்று மதிப்பிட்டு, அதிலுள்ள சிவப்புக் கற்களுக்குச் சில ரூபாய்களை மதிப்பிட்டு அவர் தனவந்தராகையால் அதைத் தாமே எடுத்துக்கொள்ளலாம் என்றெண்ணி அதற்காக 10 ரூபாயை மரகதவல்லியின் கையில் கொடுத்தார்.

அந்தப் பணத்தை வாங்கிக்கொண்ட மரகதவல்லி, 'இதுவும் தெய்வானுகூலமே' என்று எண்ணிச் சற்று மகிழ்ந்தவளாய்க் கிழவ ரிடம் விடைபெற்றுக்கொண்டு அப்புறம் போய்விட்டாள். அவ்வாறு போய், பம்பாய், கல்கத்தா முதலிய விடங்களுக்குப் போவதனால் அந்த 10 ரூபாய் டிக்கட்டிற்குப் போதாதென்று தனக்குத் தோன்றியதால், விசாகப் பட்டணத்திற்கு டிக்கட்டு வாங்கிக்கொண்டுபோகத் தீர்மானித்துப் பெண்பிள்ளைகள் டிக்கட்டு வாங்குமிடத்திற்குச் சென்று டிக்கட்டு வாங்கிக்கொண்டு கிழவர் அறியாதபடி பெண்கள் ஏறும் வண்டியில் ஏறிவிட்டாள். அந்தோ! அப்போது அவளுடைய துயரம் அளவுக்கு மிஞ்சி அதிகரித்து விட்டது. அவளுக்கு அதுபரியந்தம் நேர்ந்த பெரிய ஆபத்தான சங்கடம் முற்றும் ஒன்றுகூடி அவள் மனத்தைக் கலக்கி உருக்கி விட்டது. அவள், ''அந்தோ! நாதா! தம்மைப் பிரிந்து பாவி யான் செல்கிறேனே'' என்று அடிக்கடி தன் கணவனை நினைத்தாள்; அவ்வாறு எண்ணும்போதெல்லாம் அவளுடைய கருப்பம் சிதைந்து விடும்படியான பெரிய வேதனை ஏற்பட்டு அவளை வாட்டிக் கொண்டேயிருந்தது; அப்படி அவள் விசனமுற்றுக் கண் கலங்கும் போது வண்டியில் தான் ஒருத்தியாகத் தனித்திருப்பதனால், தான் விசனிப்பதைக் கண்டு பிறர் சந்தேகிக்கக்கூடுமென்ற அச்சம் அவளுக்குண்டாயிற்று. அதனால், அவள், தனது துயரமுழு வதையும் அடக்கிக்கொண்டு தன்னைப் பார்ப்பவர்கள் சந்தேகிக்காத படி நடந்துகொள்ள வேண்டுமென்று எண்ணியவளாய் வெகு

பிரயாசைப்பட்டுத் தனது வருத்தங்களை யடக்கிக்கொண்டு, அவ் வண்டியிலுள்ள மற்றப் பெண் பிள்ளைகளுடன் தானும் கலந்து சாதாரணமாகப் பேசியபடி பிரயாணம் செய்தாள்.

அந்த வண்டியில் அவள் கூட விருந்த பெண் பிள்ளைகள் அவளுடைய தேக அழகையும், முக வசீகரத்தையும் கண்டு அதிசயித்தவர்களாய் அவளுடன் வலுவில் பேசத் தொடங்கி, "ஏனம்மா! நீ எந்த ஊருக்குச் செல்கிறாய்? உனக்குத் துணையாக யாரும் வர வில்லையா?" என்று அவளைக் கேட்டார்கள்.

இதைக் கேட்ட நம் நாரீமணி, மிகுந்து பொங்கும் வருத்தத்தை யுள்ளடக்கிக்கொண்டு பேசத் தொடங்கி அவர்களை நோக்கி, "சகோதரிகளே! விசாகப்பட்டணத்தில் என்னுடைய தாயார் இருக்கிறார்கள்; அவர்கள் மிகுந்த கடுமையான நோயினால் வாதனைப் படுவதாயும், உடனே நான் சென்றால்மாத்திரம் அவர்கள் முகத்தில் விழிக்கக்கூடுமென்றும் எனக்குத் தந்தி வந்தது; என் பிராணபதி வியாபாரியா யிருப்பதால் அவர் ஓர் முக்கியமான விஷயமாக வெளியூருக்குப் போயிருக்கிறார்; எனக்கு மாமியார் இல்லை; மாமனார் மிகுந்த விருத்தாப்பியராய்க் கண் தெரியாத நிலைமையிலிருக்கிறார்; அதனால் நான் தனியே புறப்படவேண்டியவளானேன்; என் மாமனார் எங்கள் வீட்டில் குடி யிருப்பவர்களை என்கூட ரெயிலுக் கனுப்பி என்னை வண்டி யேற்றிவிடச் செய்தார்; நான் இவ்வாறு தனியே புறப்பட்டுப் போகும் விஷயத்தைப் பற்றி என் தந்தைக்குத் தந்தி யடித்துள்ளார்; அவர் ஸ்டேஷனுக்கு வந்து என்னை யழைத்துச் செல்வார்; என் தாயாருக்கு உடம்பு எவ்வித மிருக்கின்றதோ!" என்று கண்ணீர் விட்டாள். மரகதம் கூறிய வார்த்தைகளை அப் பெண்கள் உண்மை என்று நம்பி அவளுக்குத் தேறுதலான வார்த்தைகளைக் கூறிக்கொண்டு சென்றார்கள். வண்டி சில ஸ்டேஷன்களைத் தாண்டியபின் அப் பெண்களெல்லோரும் நித்திரையில் ஆழ்ந்தார்கள்.

வண்டியும் குறித்த நேரத்தில் விசாகப்பட்டணத்தை யடைந்து நின்றது. நமது மின்னிடை மாதரசி வண்டியினின்றும் இறங்கித் தன் தந்தையைத் தேடுகிறவள்போல சுற்று முற்றும் பார்த்து

விட்டு, 'எங்கே அவர் காணப்படவில்லையே' என்று சொல்லிக் கொண்டே அவ்விடத்தை விட்டு மனிதர்கள் வெளியே செல்லும் பாதை வழியாக நடக்கத் தொடங்கினுள். அவ்வாறு நடந்த அவள் முன்பின்னறியாத புதிய ஊராகிய அவ்விடத்தில், தான் இன்ன விடத்திற்குத் தான் செல்ல வேண்டுமென்ற தீர்மான மொன்று மில்லாமல் கால் சென்றபடி நடந்து போய்க்கொண்டே யிருந்தாள். அவளுடைய துயர்ப் பிணியுடன் பசிப் பிணியும் கூடி அவளை வருத்திற்று; அதனுல் அவள் நடக்கமுடியாமல் கால் தள்ளாடினுள்; அவளுடைய தேகம் நடுக்கமுற்றது; வெயிலின் மிகுதியால் பூமியில் சூடு அதிகரித்திருந்தபடியால் அடியெடுத்து வைக்குந் தோறும் அவளுடைய பாதங்கள் வெதும்பின; அவற்றில் கொப்பளங்களுண்டாயின; அதனுல் அவள் தரையில் காலை வைக்கமாட்டாமல் நெருப்பை மிதிப்பவள்போலத் துடித்தாள்; அவளால் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியவில்லை. இவ்வித வெயிலின் கொடுமையால் அவள் மிகுந்த வாதனைப்பட்டு மேனி வாடி அங்குச் சமீபத்திலிருந்த ஓர் புளிய மரத்தடியில் சென்று 'அப்பாடா!' என்று கூறியவாறு உட்கார்ந்தாள்.

அவ்விதம் உட்கார்ந்த மரகத வல்லிக்கு அதன் மேலும் தாங்க மாட்டாத பசியினுல் களைப்பு மேலிட்டு விட்டது. அதனுல் அவள் அப்படியே அம் மரத்தின் அடிப்பாகத்தில் சாய்ந்தபடியே விழுந்து விட்டாள். அவளுடைய உணர்வு முற்றும் நீங்கி விட்டது. அவளை அப்போது கண்ட யாவரும் அவளுடைய உயிர் நீங்கி விட்ட தென்றே நினைப்பார்கள். இவ்வித நிலைமையில் அவள் மயங்கி வீழ்ந்து கிடந்தாள்.

அவ்விதமே அவள் நெடு நேரம் வரை படுத்துக் கிடந்தாள். அவ்வாறு வீழ்ந்து கிடந்த தன்மை மிகப் பரிதபிக்கக் கூடியதா யிருந்தது. அங்ஙனம் அவள் ஸ்மரணை யற்று மயங்கிப் படுத்திருக் கும் போது ஆகாயத்தில் மேகம் திரண்டு இடியும் மின்னலும் உண் டாகிப் பெரிய மழை வந்து விட்டது; அதனேடு பெருங் காற்றும் கலந்து கொண்டது. மழையும், காற்றும் கலந்து சுழற்றிச் சுழற்றி யடிக்கத் தொடங்கி விட்டன. அப்போது ஓர் சிறிய துரும்பு போல

படுத்திருந்த மரகத மணியின் தேகத்தில் அக் காற்றும், மழையும் பட்ட மாத்திரத்தில் அவள் கனே தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். சில நிமிடங்கள் வரை அவளுக்கு ஒன்றும் தோன்ற வில்லே; அவள் மிகவும் தத்தளித்தாள். அப்போது பலமான மழை பெய்ததால் அவளுடைய உடம்பு முழுதும் மழைத் தண்ணீரால் நனைந்து விட்டது. அவள் அப்போதுதான் மிகுந்த காற்றிலும், மழையிலும் தான் அகப்பட்டுக் கொண்டிருப்பதை யுணர்ந்தாள். அப்போது இரவு நடுச் சாம நேரமா யிருந்ததோடு மிகுந்த இருளும் சூழ்ந் திருந்தது. இவ்வித இருளிலும், மழையிலும், காற்றிலும் அவள் அகப்பட்டுக் கொள்ளவே அவளுடைய வயிறும், இருதயமும் ஒருங்கே பதறித் தவித்தன. அப்போது அவளுக் கேற்பட்டிருந்த பரிதாப நிலைமையைக் காண்பவர்கள் கல் மனத்தரா யிருந்தாலும் கரைந்துருகா திருக்கமாட்டார்கள். இப்பேர்ப் பட்ட நிலைமையி லிருந்த அவள், "நமக்கு எத்தகைய துன்பம் வந்தாலும், ஆபத்து நேர்ந்தாலும் நாம் இந்தப் புளியமரத்தை விட்டு நகரக் கூடாது" என்ற உறுதியைத் தீரமாக மனத்தில் வைத்தவளாய் அந்த மரத்தின் அடி வேர்க்கட்டையின் மீது ஏறி உட்கார்ந்து அந்த மரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, இரண்டு கண்களேயும் இறுக மூடியபடி அம்மரத்தின் மீது சாய்ந்து விட்டாள்.

அந்தோ! அப்போது அதி பயங்கரமாக இடிக்கும் இடியின் அதிர்ச்சியைக் கேட்டு அவளுடைய கருப்பமே நிலே புரண்டு தத்தளித்துக்கொண்டிருந்தது; மின்னலின் பிரகாசமானது அவள் கண்களே மூடி யிருப்பினும் அதி தீவிரமாக அக் கண்களுக்குள் பிரவேசித்து அவ் விழிகளேக் கூசும்படி செய்து கொண்டிருந்தது. மழையோ அவளுடைய தேகமுழுவதையும் வெள்ளத்தில் மிதப்பது போல செய்து விட்டது. இவ்வாறு இடியின் சப்தமும், மின்னலின் காந்தியும், மழையின் வெள்ளமும் ஒன்று கூடி நம் மடமயிலாகிய மரகத மணியை அளவற்ற திகிலுக்குள்ளும், வேதனேக்குள்ளும் சிக்கும் படி செய்துகொண்டிருந்தன.

அந்தோ! அவள் கண்களே மூடியபடியே இத்தகைய பெரிய இம்சைகளேச் சகிக்க மாட்டாமல் கலங்கிக் கொண்டிருக்கும் நிலைமை

யிலும், அவளுடைய பிராணகாந்தனின் உருவமும், முன்னே குளத்தில் சந்திரனுடைய பிம்பம் தண்ணீரில் தெரிந்த போது அவளின் கருப்பத்திலுள்ள குழந்தையே நேரில் வந்து பேசுவது போலத் தோன்றிய பிரம்மானந்தமான காட்சியுமே அவள் இரு கண்களிலும் தோன்றிக்கொண்டிருந்தன. அவ்வமயம் அவளுடைய நிலைமை ஓர் உன்மத்தனின் நிலைமைக் கொப்பாகவே யிருந்தது. அவள் தன்னுடைய நாயகனின் உருவம் தோற்றக் கண்டதும், அதை மெய்யான தோற்றமென்றே நினைத்து, "ஆ! என்னுருயிர்த் துணைவரே!" என்று கூவியபடியே மரத்தைப் பற்றி யிருந்த தன் கைகளை எடுத்துத் தன் கண்ணெதிரில் தோன்றிய கணவனின் உருவத்தைத் தழுவிக்கொள்ள நினைத்து எழுந்தாள். அத்தருணம் வேகமா யடித்துக்கொண்டிருந்த காற்று அவளை ஒரே தள்ளாகக் கீழே சடக்கென்று தள்ளி விட்டது. அவ்வாறு தள்ளவே அவள் கீழே விழுந்து விட்டாள். அப்படி விழுந்துவிட்ட பின்னரே தான் கண்டது உரு வெளித் தோற்றம் என்பதை யுணர்ந்தாள். அதன் மேல் மிகுந்த நடுக்கத்துடனும், மனக் கலக்கத்துடனும் எழுந்து மீண்டும் முன் போலவே அமர்ந்து கண்ணீர் விட்ட வண்ணம், "ஐயோ! நம்மை ஈசன் பல விதத்திலும் இம்சை செய்தும் இரும்பிலும் வலிய இவ்வுயிர் இன்னும் நீங்கவில்லையே ! ஏ கருணையங் கடலே! இவ்வேழையின் மீது உனக்கித்தகைய கடினமான சித்தம் உண்டாகும்படி பாவி யான் என்ன பாதகம் செய்தேனோ தெரிய வில்லையே ! பதியால் விலக்கப்பட்டுப் பெற்றோரை இழந்து வனவாசம் வந்த விடத்தில் இத்தகைய கொடிய காளகோடி விஷம் போன்ற மின்னலையும், சப்த மேகங்களும் சேர்ந்து கர்ஜிப்பது போன்ற பேரிடியையும், ஆதியில் ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துக் கோபாலரைக் காத்த காலத்தில் பெய்ததுபோலான அபாரமான மழையையும், பெரிய விருக்ஷத்தையும் குஞ்சரத்தையும் கூட நிலை கலங்கச் செய்யக் கூடிய விபரீதமான சண்டமாருதக் காற்றையும் உண்டாக்கி எனக்கு மேலும் மேலும் பெருந் துயரத்தை விளைவிக்கின்றாயே ! ஐயோ! பெரிய பெரிய மழைத் துளிகள் கற்கள் விழுவதைப் போல தேகத்தில் விழுந்து எனக்கு மிகுந்த வேதனையை உண்டாக்குகின்றனவே; அவற்றோடு காற்றின் வேகத்தினால் மரத்

திலுள்ள கிளைகள் முறிந்து தபீர் தபீர் என்று என் மீது விழுந்து என்னை வருத்துகின்றனவே! இப்படி என் மனத்தைப் பல விதத்திலும் கலக்கி வேடிக்கை பார்ப்பதும் உன் திருவிளையாடல்களில் ஒன்றோ! ஏ கருணையங் கடலே! இப்பேராபத்திலிருந்து யான் எவ்விதம் தப்புவேன்? என்ன செய்வேன்?" என்று பகவானையும்,

"முன்னமோர் அரியாக வந்துதித் திரணியனை
முனிவோடு வதைக்க விலையோ
முத்திசேலச் சபரிக்கு அருள்செய்து அவள் கையால்
முழு அமுது செய்ய விலையோ
மின்னுமணி மாடங்கள் மிகவே குசேலர்க்கு
மேவ அருள்செய்ய விலையோ
வென்றியுள ஏனமாய் அன்றிலகு கோட்டிலே
மேதினியை வைக்க விலையோ
மன்னுசுக்ரீவனுக் கருளிமர மேழெய்து
வாலியைக் கோல்லவிலையோ
மாநிலமேலாம் வயிறு தனிலே யடக்கியே
வைத்திரக்ஷிக்கவிலையோ
கன்மமொழி தமிழ்மறை காசினிக்கருளினை
காத்தலடியானை அரிதோ
கார்மருவு சோலைசூழ் குருகைவரு சக்கரக்
கையனே மகிழ் மாறனே?'

ஸ்ரீ நம்மாழ்வார் துதி.

என்று பகவானுடைய பக்தரையும் ஸ்தோத்திரஞ் செய்து கதறி அம்மரத்தை விடாது பிடித்துக்கொண்டே யிருந்தாள்.

சற்று நேரம் சென்ற பின் இடியும், மின்னலும், மழையும் சற்று தணிய வாரம்பித்தன. பிறகு வானத்திலுள்ள மேகம் கலைந்து சிறிது வெளிச்சமும் உண்டாயிற்று; நக்ஷத்திரங்களும் ஆங்காங்கு காணப்பட்டன. மழை மட்டும் பூரணமாக நிற்காமல் சிறிய தூற்றலாகத் தூறிக்கொண்டே யிருந்தது. அப்போது மரத்தோடு மரமாக உட்கார்ந்திருந்த நமது ஏந்தெழிற் செல்வி குளிரால்

தேகம் விறைத்து விடு விடு என்று நடுங்கிக் கொண்டு மெல்ல எழுந்து வெளியில் வந்து வானத்தை நோக்கினாள். மேகங்கள் சிறிது நீங்கிய விடத்தில் தாரகைகள் தோன்றின. அவற்றைக் கண்ட வுடனே அவள் மனத்தில் திடீரென்று ஓர் விதமான எண்ண முண்டாயிற்று. அதாவது, "இத்தகைய பேரிடியுடன் கூடி முழங்கிய மழை நின்று வானத்தில் கூடி யிருந்த மேகங்கள் நீங்கி வெளிச் சமுண்டாகித் தாரகைகள் தோன்றுவதை நோக்கினால், நாம் இது காறும் அனுபவித்த துன்பங்களிலிருந்து சிறிது நீங்குவோ மென்பது தோன்றுகிறது" என்று அவள் நினைத்தாள். இத்தகைய ஓர் நூதன எண்ணம் அவளுக்குண்டாகவே முன்னே கலங்கிக் கொண்டிருந்த அவளுடைய சித்தம் சிறிது தெளிவுற்றதுபோல தோன்றியது. அதன் மேல் அவள் மழைத் தண்ணீரில் நனைந்த தனது உடையைப் பிழிந்து தரித்துக் கொண்டு கடவுளைத் தொழுது பாடிய படியே அவ்விடத்தை விட்டுத் தன் மனம் சென்ற வழியே நடக்கலானாள்.

இத்துணை நேரம் வரை மழையில் நனைந்த சிரமத்தைக் கூடப் பொருட் படுத்தாமல் அவள் சென்றாள். எனினும், மழையில் நனைந்ததாலும், பசித் தளர்ச்சியாலும் அவளுடைய கால்கள் சோர்ந்து போய் விட்டன; தலையில் வலி தோன்றி அவளை வருத்திற்று; அவளுடைய நெஞ்சில் ஓர் விதமான பீதி யுண்டாகி அது படபட வென்று துடித்துக் கொண்டிருந்தது. இத்தகைய சகிக்க வியலாத பல இம்சைகளுடன் அவள் மெல்ல எறும்பு ஊர்வது போல நடந்து கொண்டே யிருந்தாள். அவ்வாறு போய்க்கொண்டிருக்கும் போதே சிறிது நேரம் சென்ற பின் கீழ்த்திசையில் வெளிச்சம் கிளம்பிற்று. அதைக் கண்ட மாரகதத்தின் மனம் சற்று தைரியமடைந்தது. 'இன்று ஏற்பட்ட கண்டத்திலிருந்து நாம் தப்பினோம்" என்ற நம்பிக்கை அவளுக்குண்டாயிற்று. அவள் அத்தகைய நம்பிக்கையுடன் மேலும் வெகு தூரம் வரையில் நடந்து சென்றாள். சிறுகச் சிறுக மழையும் பூராவாக நின்று விட்டது. காற்றின் உதவியால் மாரகதவல்லியின் ஆடை தானாகவே உலர்ந்துவிட்டது. 'இன்ன திக்கில் தான் நடக்கின்றோம்' என்பதை யறியாமல் அவள்சென்று கொ

ண்டிருந்தாள். அவ்வாறு செல்கையில் வழியில் ஓர் தண்ணீர் ஓடையைக் கண்டாள்; அவ்வோடையருகில் சென்று தந்த சுத்தி செய்து கொண்டு துணியை நன்ருகத் தோய்த்து உடம்பு குளித்துவிட்டுப் பின்னர்த் தோய்த்த துணியை அங்குள்ள மரத்தில் கட்டிக் காய வைத்துத் தரித்துக் கொண்டு கடவுளேயும், கணவனேயும் எண்ணி வணங்கி, அதன்மேல் அங்குள்ள காட்டு மரங்களில் கிடைத்த கனிகளேக் கொய்து மேற்குறித்த இருவருக்கும் மானஸீகமாய் நிவேதனம் செய்து பின்னர் அவைகளிற் சிலவற்றைத் தனது பசிக்குப் புசித்து மிகுதியானவற்றைத் தன் மடியில் கட்டிக் கொண்டு அந்த நீர் ஓடையில் இரு கை தண்ணீரை அள்ளிக் குடித்து விட்டு மீண்டும் நடக்கத் தொடங்கிளுள். அவளுடைய கால்கள் மாத்திரம் நடந்து கொண்டேயிருந்தன; மனத்தில் சொல்லொணுத் துயரத்துடன் கூடிய பற்பல எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன; அவற்ருல் கண்ணீர் பெருகி வடிந்து கொண்டிருந்தது.

ஆனல் சூரிய வெப்பம், முதல் நாளிரவு பெய்த மழையால் அதிகமில்லாது சற்று குளிர்ச்சியாகவே இருந்தமையால் அவள் ஒரு சிறிது சிரமம் குறையப் பெற்றவளாய் நடந்து சென்ருள்; அவ்வாறு நடந்து நெடுந்தூரம் போய்விட்டாள். அவ்விதம் செல்லும்போது சூரியன் அஸ்தமிக்கும் தருணமாகிவிட்டது. அவ்வேளேயில் அவள் செல்லும் வழியில் வயல்களும், வாய்க்கால்களும், ஏற்றம் போட்டுத் தண்ணீர் இறைக்கும் கிணறுகளும், வைக்கோல் போர்களும் காணப்பட்டன. மரகதம் அவற்றைக் கண்டதும் இங்கு சமீபத்தில் ஓர் கிராமம் இருக்கக் கூடுமென்று யூகித்தறிந்து கொண்டு அங்குக் காணப்பட்ட ஒற்றையடிப் பாதையின் மீதே நடந்து சென்ருள்.

அவ்வாறு செல்லும்போது அங்குச் சமீபத்தில் ஏதோ ஓர் விதமான ஓசை கேட்டது; சிறிய கூரை வீடுகளும் தெரிந்தன. அவள் அவ்விதம் தெரிந்த விடத்தை நோக்கி மெல்லத் துவண்டு துவண்டு நடந்து சென்ருள். அப்போது சூரியன் அஸ்தமனகிரியினடியிற் புகுந்தருணமாயிருந்தபடியால் அங்குள்ள சகல வஸ்துக்களும் மஞ்சள் நிற ஆடையால் அலங்கரித்துக்கொண்டு சூரியனே அனுப்பி

விட்டுச் சந்திரனை வரவேற்கும் நோக்கத்துடன் இருப்பனபோன்று காணப்பட்டன. அக்காட்சி, காண்பதற்கு வெகு ரம்மியமாயிருந்தது.

இத்தகைய விடத்திலிருந்த ஓர் குடிசையின் உள்ளிருந்து ஓர் கிழவி மெல்ல வெளிப்பட்டாள். அவளைக் கண்ட நமது மடமயிலான மரகதம் சற்று மனந்தேறியவளாய் அக்கிழவியின் எதிரில் சென்று வெகு வணக்கத்துடன் பேசத் தொடங்கி, "இவ்வூரின் பெயரென்ன?" என்று கேட்டாள்.

நமது மரகதமணியின் அழகையும், அவளுடைய செவ்வரி படர்ந்த விழியின் பார்வையையும் கண்டு அக்கிழவி ஆச்சரிய முற்று அவளை ஆவலுடன் நோக்கியவாறு நின்றாள். அவள், மரகதம் தன்னை நோக்கி ஏதோ பேசியதை மட்டும் உணர்ந்தாளேயன்றி இன்னது பேசினளென்பது அவளுக்குத் தெரியவில்லை. ஏனெனில், அக்கிழவி தெலுங்கு நாட்டைச் சேர்ந்தவளாதலால், மரகதம் பேசிய தமிழ் வார்த்தைகள் அவளுக்குப் புலப்படவில்லை. ஆகையால் கிழவி மரகதத்தை நோக்கி, "ஏமம்மா! ஏமி மாடலாடிதிவி ? மேமு அரவமுவாள்ளு காது; மேமு தெலுகுவாள்ளு; நீவு தெலுகுலோனே செப்தே நேனு பாகதெலுஸுகொண்டானு; நீவு ஏ ஊரு ? எக்கட நின்சி வஸ்துன்னுவு? இச்சட எவரினி சூடவலனு? கனுக ஏமி பனிகா வச்சியுன்னுவு ? நின்னு சூசிதே ரதிதேவிவல அந்தமுகானுன்னுவு ! மரியுனி நீ கடுபு சூசிதே வேகடிகாயுன்னுவனி தோசுசுன்னதி! ஏமி விஷயம்? தெலிய செப்பு தல்லி!" என்று தெலுங்கினுல் கேட்டாள்.

இவற்றைக் கேட்டதும் மரகதவல்லி, கொஞ்சம் தெலுங்கும் தெரிந்தவளாயிருந்தபடியால், அவள் கேட்ட விஷயங்களைத் தெரிந்துகொண்டு, தனக்குத் தெரிந்திருந்த தெலுங்கு பாஷையால் பேசத் தொடங்கி, மிகுந்த நயனமான குரலினுல், "அவ்வகாரு! ஈ ஊரிகி பேரேமி? நேனு இச்சட ஏமி பனிகானு ராலேது; இச்சட நேனு சூடவலஸின மனுஷ்யுலு எவ்வருலேரு ; நாயொக்க சரித்திரமுனு விண்டே ராயிகூட கரிகிபோவுனு; தல்லீ ! அதந்த இப்புடு எந்துகு மாட்லா

182849

டேதி! அதி அட்லனேஉண்டனி! வாள்ளவாள்ள தலராதனு வாள்ள னே அனுபவிஞ்சவலனு;மாயம்மா! நேனு ஒகபரதேசி! நாகு கொந்த காலமுனகு இச்சட ஏமைனபனி இச்சி நன்னு காப்பாடவலெனு; அந்துகே நேனு வேடுகொண்டானு; நாயொக்க விவரம்பு வெனக மீகுதெலுபு சுன்னானு; மீரு அடிகனதிவேல நேனு வேகடிகானே யுன்னானு; தல்லி! மீரு தயசேஸி நாகுப்ராதுகே தாரிதெலுபவல திக்குலேனிபாபியைன நாகு இவேள மீருதா அபயமிவ்வவலனு" என்று மிகுந்த பரிதாபத்துடன் வேண்டிக் கொண்டாள்.

இதைக் கேட்ட கிழவி, ஏற்கெனவே இளகிய மனத்தை யுடையவளாகையினால், அவள் மனம் உருகிற்று. அவளுக்கு மரகதவல்லியின் மீது மிகுந்த இரக்கமுண்டாயிற்று; அதனால் அக் கிழவியின் மனத்தில் மரகதவல்லிக்கு உதவி புரிய வேண்டுமென்ற தீவிரமான ஓர் எண்ணம் உதித்து விட்டது. அதன்மேல் கிழவி மரகதமணியை நோக்கிப் பேசத் தொடங்கி, (இனி தெலுங்கு சம்பாஷணையைத் தமிழிலேயே வரைவோம்) "அம்மா! உன்னைப்பார்த்தால் நீ கூறுவது போல கல்லும் கரைந்து விடும் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை; உன்முகத்தை நோக்கியவுடனே எனக்கு உன் மீது இரக்கம் உண்டாகி, உனக்கு உதவி புரியவேண்டுமென்ற எண்ணம் தானாவே யுதித்து விட்டது. அம்மா! நீ நிற்கும் பரிதாப நிலையைப் பார்க்கப் பார்க்க எனக்குத் துக்கம் அதிகரிக்கிறது; நீயோ இளைப்பினால் நிற்க முடியாமல் தள்ளாடுகிறாய்; ஆதலால், நீ உள்ளே வா! வந்து உட்கார்ந்து கொண்டு பிறகு பேச வேண்டியதைப் பேசலாம்; என்னால் கூடிய உதவியை உனக்குப் புரிய ஆட்சேபனையில்லை; நீ கண் கலங்காதே" என்று கூறி அவளை உள்ளே அழைத்துச் சென்று உட்காரச் செய்து அவளுக்குச் சிறிது நீராகாரமளித்துப் பின், அவளருகில் வந்துட்கார்ந்துகொண்டு, "ஏனம்மா! உன் பெயர் என்ன? உன் ஊர் எது? உனக்குற்ற ஆபத்து என்ன? உன் கணவன், பெற்றோர் முதலியவர்கள் எங்கே? கர்ப்பிணியாகிய இளம்பிராயத்தையுடைய மாது நீ தனித்து எவ்விதம் இங்கு வந்தாய்? உனது வரலாற்றை விவரமாகக் கூறுவாயம்மா" என்று வெகு பிரீதியாயும், நயமாயும் கேட்டாள்.

இவற்றைக் கேட்ட மரகதவல்லி, முன்னரே இக்கேள்விகளைக் கிழவி கேட்பாளென்பதைத் தெரிந்துகொண்டிருந்தாளாதலால் இக்கேள்விகளால் அதிகமான கலக்கத்தை யடையாமல், தான் முந்தியே ஒருவகையாகத் தீர்மானித்திருந்தபடி பேசத்தொடங்கி, "பாட்டி! என் கதையைச் சொன்னால் வெட்கம்! சொல்லா விட்டால் துக்கம்; நான் என்னவென்று அதை என் வாயினாலேயே சொல்வேன்! என்னுடைய இருப்பிடம் சென்னப்பட்டணத்திற் கருகிலுள்ளது; எனக்கு விவாகமாகி ஒரு வருஷமேதான் ஆகின்றது; என் மாமியும், நாத்தியும் மிகுந்த கொடுமையுடன் என்னை நடத்திவந்தார்கள்; அவர்கள் செய்த கொடுமைகளை யெல்லாம் நான் பொறுத்திருந்தேன்; முடிவில் என் புருஷரும் என்னை இம்சிக்கத் தொடங்கினார்! எனக்குத் தாய் தந்தையர் முதலிய எவரும் இல்லை; நான், என் பர்த்தாவேதான் கதியென் றெண்ணி யிருந்தேன்; எனக்குத் தற்போது 5 மாதத்திய கர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது; சென்ற மாதத்தில் என் மாமியும், நாத்தியும் என்னை விலக்கிவிட்டு என் பர்த்தாவுக்கு மறு விவாகம் செய்து வைத்துவிட்டார்கள்; அதன்மேல் என்னை வீட்டிலும் இருக்கலாகா தென்று என் புருஷரும், மற்றவர்களும் அடித்துத் துரத்தி விட்டார்கள்; பாட்டி! என்னுடைய பிராணபதியினுடைய க்ஷேமத் தையும், அவருடைய சுகமான வாழ்க்கையையும் கோரி, யான் அவர் விருப்பப்படியே வெளியில் வந்துவிட்டேன்; அப்படி வந்தபோது என்னுடைய உயிரை எவ்விதத்திலேனும் மாய்த்துக்கொள்ள எண்ணினேன்; எனினும் என் வயிற்றில் கருவிருப்பதால் அநியாய மான சிசுஹத்தி செய்யும் பாபமும், தற்கொலை செய்துகொள்ளும் பாதகமும் சம்பவிக்குமே என்று அஞ்சி, இன்னும் 5 மாதகாலத்தை எவ்விதத்திலேனும் கழித்து, வயிற்றிலுள்ள சிசு வெளிப்பட்டபின் என்னுடைய உயிரைப் போக்கிக்கொள்ளலாமென்று தீர்மானித் துத் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தை விடுத்து இத்திசை யைநோக்கி வந்தேன்; மூன்று தினங்களாக நான் படாத பாடுகள் பட்டுப் பிரயாணஞ் செய்து இன்று இந்த ஊரை அடைந்தேன்; பாட்டி! எந்தவிதத்திலாவது என்னுடைய பர்த்தா சுகமாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்தால் அதுவே எனக்குப் போதுமானது;

அவருடைய நலன் ஒன்றைத்தான் நான் நாடுகிறேன்; அதையின்றி வேறு எதுவும் எனக்குப் பிரியமில்லை; என் பர்த்தாவுக்கு யான் கைங் கரியம் புரிந்து மகிழும் பாக்கியத்தைப் பெறுவிடினும் அவருடைய சந்தோஷத்திற்குப் பங்கமாக அங்கே யிராமல் வெளியேறியாவது அவர் மனதிற்குத் திருப்தியை உண்டாக்கவேண்டுமென்று நினைத்தே இவ்வாறு வெளியேறி வந்தேன்; எனக்கேற்பட்ட விதி இவ்வளவுதான் என்று நான் மனத்தைத் தேற்றிக்கொண்டேன்" என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தாள்.

மரகதம் கூறிய கட்டுக் கதையைக் கேட்ட கிழவிக்குச் சகிக்க வியலாத துயரம் மேலிட்டுவிட்டது. அதனால் அவள் கண் கலங் கியபடியே மரகதத்தை நோக்கி, "அம்மா! என்னுடைய துர்ப் பாக்கிய நிலைமையைக் காட்டினும் உன்னுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கக்கூடியதா யிருக்கிறது; ஐயோ! நான் பெருந் துக்கத்தில் மூழ்கியிருக்கும்போது இந்த துக்கச் செய்தியையுமா கேட்க வேண்டும்? எனக்கும் அருமையான ஓர் பெண்ணிருக்கிறாள்; நான் அவளுக்கு எத்தனையோ பணச்செலவுகள் செய்து நல்ல மாப்பிள்ளை யைத் தேடிக் கல்யாணம் செய்துவைத்தேன்; அந்த மாப்பிள்ளை ஏதோ காரணத்தை முன்னிட்டு என் மகளை தள்ளிவிட்டு வேறு பெண்ணை மணந்துகொண்டான். அதற்காக நான் எனக்கிருந்த சகல சொத்துக்களையும் விற்றுச் செலவுசெய்து அந்த மாப்பிள்ளை மீது வழக்குத் தொடுத்தேன்; எனக்கொன்றும் அனுகூலமாக வில்லை; அதன்மேல் நான் என் விதியை எண்ணி என் பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டு வேதனையை அடைந்துவந்தேன்; நான் கையிலிருந்த பணத்தையெல்லாம் அந்த வியாஜ்ஜியத்தில் செலவு செய்துவிட்டதால் சாப்பிடவும் சோறில்லாது கஷ்டப் பட்டேன்; என் மகளும் துன்பப் பட்டாள்; அப்படி யிருக்கும் போது ஒரு புண்ணியவானால் எங்களுக்குதவியேற்பட்டது; ஆகா! புண்ணியவானென்றால் அவருக்குத்தான் தகும். இவ்வூருக்கு சிம்மாசலம் என்று பெயர்; இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் மகானுபாவராகிய ஸீதாராம தாஸ் என்னும் பெரிய ஜமீன்தார் ஒருவரிருக்கிறார்; அவருக்கு அனேக கிராமங்

களிருக்கின்றன; அந்தப் புண்ணியாத்மாவுக்குக் குழந்தை எதுவுமில்லை; அவருடைய மனைவியாரும் இளமையிலேயே இறந்துவிட்டார்கள்; இப்போது அவர் இரண்டாவது மனைவியாராக ஒரு புண்ணியவதியைத் திருமணஞ் செய்துகொண்டிருக்கிறார்; அந்த அம்மாளுக்கும் குழந்தைகள் இல்லை; அந்தப் புண்ணியாத்மாக்களாகிய இருவரும் தங்கள் செல்வம் முற்றும் தானதருமங்களிலேயே செலவிட்டு வருகிறார்கள்; அவர் வறுமையால் கஷ்டப்படும் ஏழைகளைக் கண்டால் மனம் சகிக்கமாட்டார்; அவருடைய கருணையினால் பலவிதமான தர்மங்கள் நடைபெற்றுவருகின்றன; அவர், எத்தனையோ அவுடதாலயங்களையும், எத்தனையோ கலாசாலைகளையும், எத்தனையோ கைத்தொழிற்சாலைகளையும், நெசவுத் தொழிற்சாலைகளையும், நூல் நூற்கும் கை ராட்டினத் தொழிற் சாலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்; பற்பல தரும சத்திரங்களைக் கட்டி அவற்றில் ஏழைகளுக்குச் சாப்பாடு போடும்படி செய்திருக்கிறார்; இவைகளன்றி அனேகம் ஏழைகளுக்கு வேலை கொடுத்து அவர்களின் குடும்பங்களைக் காத்து வருகிறார்; நாங்களும் தற்போது அந்த மகானுபாவரின் தருமத்தில் தான் பிழைத்து வருகிறோம்; பக்கத்திலிருக்கும் அறையில் என் மகள் கை ராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டிருக்கிறாள்; நாங்கள் தினம் நூல் நூற்று அந்நூலை அந்தப் பிரபு அவர்களிடம் சேர்த்துவிடுவோம்; அவர் ஆளுக்கு எட்டணா வீதம் கூலி கொடுத்துவிடுவார்; இவ் வீட்டையும் வாடகையின்றி எமக் களித்திருக்கிறார்.

அம்மா! நீயும் இங்கு எங்களுடன் கூடவே இருந்து நூல் நூற்று அதன்மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு உன் காலத்தைக் கடத்தலாம்; தரும குணவானாகிய அப் பிரபு உலகில் நன்றாயிருக்கும் வரையில் அனாதைகளாகிய நமக்குக் குறைவில்லை; உனக்கு என்னால் கூடிய உதவியைச் செய்ய நான் சித்தமாகக் காத்திருக்கின்றேன்'' என்று கூறி மரகதத்தைத் தேற்றிப் பின் தன் மகளிருந்த விடத்திற்கு அவளை அழைத்துச்சென்று அவளுக்கு அறிமுகம் செய்வித்துச் சர்க்காவையும் மரகதத்திற்குக் காட்டினாள்.

மரகதம் கிழவியின் தயாள குணத்திற்கு மகிழ்ந்தாள். தான் கூறிய கட்டுக் கதையைப் போலவே கிழவியின்மகள் விஷயமும் நடந்திருப்பதைப் பற்றி அக் கிழவியின் விஷயத்திலும், அவள் மகள் விஷயத்திலும் இரக்கங்கொண்டாள். கிழவி தன்மீது சிறிதும் சந்தேகமே கொள்ளாது தனக்கு அனுதாபப் பட்டுப் பேசியதை எண்ணி அவள்மீது மிக்க விசுவாச முடையவளாயினுள், பின், 'எல்லாம் கடவுள் செயல்' என்று பகவானைக் கொண்டாடி, நூல் நூற்கும் சர்க்காவைப் பார்த்ததுடன் கிழவி மகளுடன் அன்பாகப் பேசினுள்.

பின்னர்க் கிழவி மரகதத்தை அழைத்துச் சென்று உணவுண் ணும்படி வேண்டினுள்; அவள் அதற் கிசைந்தாள். அதன்மேல் கிழவியும், அவள் குமாரத்தியும் தங்களுக்குத் தயாரித்து வைத் திருந்த உணவை மரகதத்திற்கும் இட்டுத் தாங்களும் உண்டார்கள். கிழவி தன்மீது மிகுந்த் அன்பு காட்டித் தனக்கு அன்னமிட்டதால் மரகதம் மனத் திருப்தி யடைந்தாள். அவ்வகைத் திருப்தியாலும், தான் மூன்று நாளாகப் பட்டினி கிடந்ததாலும் அவர்கள் தனக் கிட்ட அன்னத்தில் மிச்சம் வைக்காமல் வெகு பிரியத்துடன் முழுவதை யும் சாப்பிட்டு எழுந்தாள். பிறகு மூவரும் பொதுவாக உலக விஷயங்களைப் பற்றியும், தங்கள் விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்து நித்திரையில் ஆழ்ந்தார்கள்.

மரகதம் மூன்று நாட்களாக அலைந்த அலுப்பினுலும், முதல் நாள் இரவில் காற்றினுலும் மழையினுலும் அவஸ்தைப் பட்ட தாலும் மறுநாள் விடியும் வரை விழிக்காமல் தன்னை மறந்து அயர் ந்து நித்திரை செய்தாள். மறுநாள் பொழுது புலர்ந்ததும் மூவரும் எழுந்தார்கள். அவ்வாறு எழுந்தபின் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங் கினுர்கள். அப்போது மரகதம் அவர்களுடன் வீட்டு வேலை களைச் செய்ய ஆரம்பித்தாள். கிழவி அதைக் கண்டு அவளை வேலை செய்ய விடாது தடுத்துத் தன்னுடைய கைராட்டினத்தை அவளி டம் கொடுத்து நூல் நூற்கும்படி சொன்னுள். மரகதத்திற்கு ஏற் கெனவே தான் வீட்டில் நூல் நூற்றவழக்க மிருந்ததால் அவள்

சர்க்காவை வாங்கிக் கொண்டு உட்கார்ந்து வெகு அழகாக நூலை நூற்கத் தொடங்கினுள்.

புதியதாக நூற்கத் தொடங்கிய மரகதம் வெகு திறமையாக நூற்பதைக் கண்ட கிழவியும், அவள் மகளும் அவளை வியந்து கொண்டாடினார்கள். நம் மரகதம் இவ்விதமாக அங்கிருந்து தினந்தோறும் கடவுளின் மீது தோத்திரம் பாடிக் கொண்டே நூலை நூற்பதும், கடவுளின் பக்தி விஷயமான நூல்களையும், பதிவிரதைகளின் சரித்திரங்களையும், சிறந்த புத்தி புகட்டக் கூடிய நாவல்களையும் கிழவிக்கும் அவள் மகளுக்கும் படித்துக் காட்டுவதுமாய்க் காலத்தைக் கழித்துக் கொண்டு வந்தாள். இவ்விதமே 15 தினங்கள் சென்றன. அதன் மேல் ஒரு நாள் வழக்கம்போல மரகதம் ராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டிருக்கையில், கிழவி நூல் நூற்பதற்குப்பஞ்சு கொடுக்கும் இடத்திற்குச் சென்று ஓர் பெரிய கடிதத்தில் பஞ்சு வாங்கிக் கொண்டு வந்தாள்.

அவ்விதம் கொண்டுவந்த கிழவி அதை மரகதவல்லியிடம் கொடுத்து, "அம்மா, இப் பஞ்சை அப்பெட்டியில் வைத்து விடு" என்று கூறி ஒருபெட்டியைக் காட்டி விட்டு ஏதோ அலுவலாக வெளியிற்போய்விட்டாள். மரகதம் அவ்வாறே பஞ்சை அந்தப் பெட்டியில்வைத்துவிட்டுப் பஞ்சின்மேல் சுருட்டிக் கட்டியிருந்த பேப்பரைப்பொழுதுபோக்கிற்காகப் பிரித்துப் படிக்கலானுள். அதுசமீபமாயுள்ள நாளில் வெளியான பேப்பர்; அவ்வாறு அது, சமீபத்தில் வெளியான பேப்பராயிருக்கவே அவள் அந்தப் பேப்பரை முற்றும் படிக்க ஆவலையடைந்து படித்துக்கொண்டுவந்தாள். அப்படி படித்து வருகையில் அதில், அவளுடைய தந்தையால், அவளின் புகைப் படப் பிளாக்குடன் அவள் விஷயம் ஒரு பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. (அவ்விஷயம் முன் ஓரிடத்தில் வந்திருப்பது வாசகர்களுக்கு ஞாபகத்திலிருக்கலாம்) அதைக் கண்டவுடன் மரகதம் மிகுந்த ஆவலுடன் படித்துப் பார்த்தாள். அதில் ஒரு பைராகி தன்னை ஏமாற்றி அழைத்துக்கொண்டுபோய் விட்டதாகப் பொய்க் கதை பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தவுடனே, அவள் மிகுந்த ஆச்சரியமும், மனத் துயரமும் அடைந்தாள். அவ்வா

றடைந்து, "அந்தோ! நம்முடைய கணவர், தம்மீது பழி யில்லாமற் போவதற்கும், குற்றத்தில் சம்பந்தப்படாமல் தாம் தப்பித்துக் கொள்வதற்கும் பைராகி என்னை மந்திர மிட்டு அழைத்துச் சென்றுவிட்டதாக ஒரு கட்டுக் கதையைக் கூறியிருக்கிறார் என்பது விளங்குகின்றது; ஆகா! என்ன சம்பவம்! என்ன நிகழ்ச்சி! ஐயோ! போலீஸாருக்கும் இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டிருப்பதால் அவர்களும் நம்மைத் தேடிக்கொண்டிருப்பார்கள்; ஆதலால் நாம் இங்கிருப்பதைக் கண்டுவிட்டால் நம் நோக்கம் நிறைவேறுமற் போய் விடுமே! ஆ! இவ்விதமே இவ்விஷயம் நடக்குமென்று நாம் முந்தியே நினைத்தோம்; நினைத்தவாறே விஷயம் முடிந்துவிட்டதே! நான் என்ன செய்வேன்?" என்று மிகுந்த வருத்தத்தை யடைந்து அப்பத்திரிகையைச் சுக்கல் சுக்கலாகக் கிழித் தெறிந்துவிட்டாள்.

அவ்வாறு கிழித்தெறிந்த பின்னரும், "ஆ! இங்குள்ளவர்களுக்கு வேறு பத்திரிகைகள் கிடைத்தால் அவர்கள் அவற்றின் மூலம் நம் விஷயத்தைத் தெரிந்துகொள்வார்களே!" என்று மனங் கலங்கினள். அங்ஙனம் கலங்கியவளுக்கு, "கிழவியும், அவள் மகளும் படிக்கத் தெரியாதவர்களாதலால் அவர்கள் பத்திரிகைகளின் மூலம் நம் விஷயத்தைத் தெரிந்து கொள்ளமாட்டார்கள்" என்று சிறிது தைரியமுண்டாயிற்று. எனினும் அவளுடைய உருவப் படம் பத்திரிகையில் போடப்பட்டிருந்ததால் அதன் மூலம் அவர்கள் தன் விஷயத்தைத் தெரிந்துகொள்ளக்கூடுமே என்றதில் மீண்டும் அவளுக் குண்டாகிவிட்டது. இவ்வகைக் குழப்பத்தினால் அவள் மதி மயங்கி மிகுந்த கவலையுடன் தனது வேலையாகிய சர்க்கா சுழற்றுந் தொழிலைச் செய்யத் தொடங்கினள். அப்படி தொடங்கி, "ஆ! ஆதி பரம்பொருளே! அகில ஜன ரக்ஷகனே! எனக் கிதுபரியந்தம் சம்பவித்த ஆபத்துக்கள் போதும்; இனியும் எனக்கு ஆபத்துக்கள் நேராமல் இம்மட்டோடு நிறுத்தி என்னை ஆதரிக்கவேண்டும்; என்னை எவரும் காணாதவாறு அருள் புரியவேண்டும்; ஜகதீசா! உலகெலாம் காக்கு முனக்கு இதொரு எளிதான காரியமே; என்னப்பனே! கருணை வள்ளலே!

"எனக் கெனச்செயல் வேறிலை யாவுமிங் கொருநின்
றனக் கெனத்தகு முடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத் தகத்துள வழுக்கெலா மாற்றியெம் பிரானீ
நினைத்த தெப்படியப்படி யருளுத னீதம்"

என்று பாடிக்கொண்டே சர்க்காவைச் சுற்றித் தன் வேலையை முடித்துவிட்டு எழுந்து வீட்டு வேலையிலும் கலந்துகொண்டாள். இவ்வாறே அவள் தினந்தோறும் வேலை செய்து, தனது பங்குக்கு வரும் கூலியாகிய எட்டணாவையும் கிழவியின் கையிலேயே கொடுத்துவந்தாள். கிழவியுடனும், அவள் மகளுடனும், தன் தாயுடனும் தங்கையுடனும் பழகுவதுபோலவே அத்யந்த பிரியம் வைத்து நேசமுடன் பழகி அவர்கள் மனங் கோணுதபடி நடந்துகொண்டு வந்தாள். அதனால் அவர்களுக்கும் மரகதத்தின்மீது நாளுக்கு நாள் அன்பு அதிகரித்துக்கொண்டே வந்தது. மேலும் அவளால் தங்களுக்கு வேலை குறைந்ததுடன் எட்டணு அதிக வரும்படியும் வந்ததைப்பற்றி அவர்கள் மிகுந்த சந்தோஷத்தையும் அடைந்தார்கள்; மரகதவல்லியை வெகு பக்ஷமாக நடத்தி வந்தார்கள். இவர்கள் இப்படி மனத் திருப்தியுடன் வசித்துவருங்காலத்தில் மரகதவல்லி நூற்கும் நூல் வெகு அழகாயும், சன்னமாயும், மற்றவர்கள் நூற்கும் நூல்களைக் காட்டிலும் உயர்ந்ததாயு மிருந்தபடியால், கிழவியின் குடும்பத்தை ஆதரித்துவந்த பிரபு அந்த நூலைக் கண்டு வியந்து, ஒருநாள் கிழவியிடம், "இந்த நூல் யாரால் நூற்கப்பட்டது?" என்று கேட்டார். அப்போது, கிழவி, தன்னிடத்தில் மரகதம், தான் வந்திருப்பதைப் பிறருக்குத் தெரிவிக்காமலிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தபடியால், அவள் விஷயத்தை வெளியிடாமல், "என் மகள்தான் இதை நூற்ருள்" என்று பொதுவாகக் கூறிவிட்டாள். நூலின் அழகையும், சன்னத்தையும் கண்டு அது கிழவியின் மகளாலேயே நூற்கப்பட்டதென்று அந்தப் பிரபு எண்ணி அதற்கு வழக்கமாகக் கொடுக்கும் 8 அணுவுடன் மேலும் எட்டணுச் சேர்த்து ஒரு ரூபாய் கொடுக்கத் தொடங்கினர். மரகதவல்லியின் மூலமாகத் தங்களுக்கு வருமானம் முன்னிலும் அதிகமாக வரத் தலைப்படவே அந்தக் கிழவியும், அவ

ளுடைய குமாரத்தியும் மரகதவல்லியின்மீது நாளுக்கு நாள் அளவு கடந்த பிரீதி வைத்து வந்தார்கள். தினந்தோறும் மரகதம் தன் கணவனையும், கடவுளையும் ஒரு வினடியும் மறவாது எண்ணித் துதித்துக்கொண்டே தன் துயரம் முற்றும் உள்ளடக்கிய வண்ணம் தனக் கேற்பட்ட வேலையைச் சரிவரச் செய்துவந்தாள். மேலும் அவள், "நாம் முன்னொரு நாள் பேப்பரில் கண்ட நம் தந்தையின் விளம்பரத்திற்குப் பதிலோ, அதற்குச் சம்பந்தப்பட்ட விஷயங் களோ மீண்டும் அந்தப் பேப்பரில் எந்த:நிமிஷம் வருமோ! யார் நாம் இங்கிருப்பதைக் கண்டுவிடுவார்களோ" என்கிற அச்சமும், கவலையும் கொண்டு சதாகாலமும் அதே சிந்தனையிலிருந்து கொண்டு வந்தாள். அத்தகைய கலக்கங்கள் அவள் மனத்திற் குடிகொண் டிருந்தும் அவள் தன் கிலேசங்களையெல்லாம் மனதிற்குள் அடக் கிக்கொண்டு வெகு பொறுமையுடனிருந்து வந்தாள்.

இவ்விதமாகவே இரண்டு மாதகாலமாயிற்று. அவளுக்கு வெளிச் செய்தி எதுவும் தெரியவே யில்லை. அப்படி யிருக்கும் போது அவளுக்கு அவ்வூர்க் கோவிலுக்குச் சென்று அங்குள்ள சுவாமியைத் தரிசித்து வரவேண்டுமென்ற வேட்கை மனத்தில் மிகவும் அதிகரித்துக்கொண்டே யிருந்தது. அதனால் அவள் தனது விருப்பத்தை ஒருநாள் கிழவியிடம் தெரிவித்தாள்.

அதைக் கேட்ட கிழவி ஒரு தினம் இரவில் அவளை அக் கோவிலுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்தாள். அவ் விதமே ஓர் தினம் இரவு கிழவி மரகதவல்லியையும், தன்னுடைய பெண்ணையும் கோயிலுக்கு அழைத்துச் சென்று சுவாமியைத் தரிசிக்கும்படி செய்தாள். அப்போது நம் மரகதமணி அங்கு எழுந்தருளி யிருக்கும் கடவுளை மெய்ம்மறந்த பக்தியுடன் துதித்து, தன்னிருப்பிடத்தை எவரும் கண்டுகொள்ளா திருக்கும் படியான வரம் ;தனக்குத் தரவேண்டுமென்று வேண்டி வணங்கி ளுள். பின் மூவரும் கோயிலை விட்டுத் திரும்பி வந்து வீட்டை யடைந்தார்கள்.

அவர்கள் இருந்த வீட்டின் பின்புறத்தில் ஓர் சிறிய குள மிருந்தது. அக் குளத்திலிருந்து சுத்த ஜலம் கொணர்ந்து அவர்

கள் உபயோகப்படுத்திக்கொண்டிருந்தார்கள். ஆதலால் ஓர் தினம் மரகதவல்லி இராக் காலத்தில் அக் குளத்தில் நீர் திரட்டி வரும் பொருட்டு இரண்டு குடங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பின்புற வாயில் வழியாகச் சென்று தண்ணீர் மொண்டுகொண்டு திரும்பி வந்தாள். அப்படி வரும்போது ஒரு பெரிய குதிரை வண்டி வந்துகொண்டிருந்தது. அதற்கு எதிர் முகமாக ஓர் மோட்டார்கார் வந்துவிட்டது. அவ் வண்டியில் பூட்டிய குதிரை புதிய குதிரையாதலால் மோட்டாரைக் கண்டு மிரண்டு வண்டியைத் தாறுமாறாக இழுத்துக் கொண்டு ஓடத் தலைப்பட்டது. அவ்விதம் ஓடிய குதிரை வயிற்றில் சிசுவுடனும், தலையி லொரு தண்ணீர்க் குடத்துடனும், இடுப்பில் ஓர் தண்ணீர்க் குடத்துடனும் தள்ளாடி யவாறு தன் விதியை எண்ணி வருந்திக்கொண்டு சென்ற நம் மரகதத்தின்மீது உராய்ந்து அவள் இடுப்பிலும், தலையிலும் இருந்த தண்ணீர்க் குடங்களைத் தள்ளி ஒரு காலினால் அவளையும் உதைத்துத் தள்ளிவிட்டு ஓடிற்று.

அந்தோ! ஒரு சிறு காற்றடித்தாலும் கீழே விழுந்துவிடக் கூடிய நிலைமையிலிருந்த நம் மரகதவல்லி குதிரையின் காலினால் உதைத்துத் தள்ளப்பட்ட அத்தருணமே அலங் கோலமாகக் கீழே விழுந்துவிட்டாள். அவ்வாறு குதிரையால் தள்ளப்பட்டுக் கீழே விழுந்த மரகதத்தை அக் குதிரை வண்டியிலேறி யிருந்த ஓர் அழகிய யௌவன மடந்தை பார்த்துவிட்டாள். அவள், மிகுந்த தயாள குணமும், பரோபகார சிந்தையு முடையவளாதலால் மரகதத்திற்கு உதவி செய்யும் பொருட்டுத் தனது சாரதியை நோக்கி, "குதிரையின் கடிவாள வாரை பலமாக இழுத்து வண்டியை நிறுத்து! நிறுத்து!!" என்று ஆத்திரத்தோடு கூறினாள். கோச்மென் எவ்வளவோ பிரயாசைப் பட்டுக் குதிரையை நிறுத்த முயற்சி செய்து பார்த்தான்; குதிரை அடங்கவில்லை. வண்டி நிற்காமல் பின்னும் வேகமாகச் சென்றது. அவ்வாறு செல்லவே வண்டியிலிருந்த மங்கை தனது உயிரையும் பொருட்படுத்தாது அவ் வண்டியின் கதவைத் திறந்துகொண்டு ஒரே பாய்ச்சலாக தபீர் என்று யாவரும் வியக்கத் தக்கவிதமாகக் கீழே குதித்தாள்.

அவ்விதம் குதித்த மின்னுள் நெஞ்சம் பதைத்து, நம் அருங் குண மணியாகிய மரகதவல்லி விழுந்து கிடக்கும் இடத்திற்கு ஓடோடியும் வந்து, அவள், அலங்கோலமாக விழுந்து கிடப்பதையும், மிகுந்த அழகோடு கூடியிருப்பதையும், கருப்பவதியாயிருப்பதையும் கண்டு, "ஐயோ! நம்மால் இந்தக் கருப்பிணிக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்து விட்டதே!" என்று அனுதாபமும், வருத்தமுமடைந்து, அவளைத் தூக்கித் தன் மடியில் சாத்திக்கொண்டு மிகுந்த கவலையுடனும், கனிகரத்துடனும், "அம்மணீ! அம்மணீ!!" என்று அழைத்தாள்.

மரகதம் ஏற்கெனவே மெலிந்திருந்ததோடு இப்போது குதிரையால் உதைத்துத் தள்ளப்பட்டதால் மயங்கி மூர்ச்சித்திருந்தாள். அதனுல் அந்த மாது கேட்ட கேள்வியை அவள் உணரவேயில்லை. இதற்குள் அந்தப்பெண்ணினுடைய வண்டிக்காரன் வெகு சாமர்த்தியமாகக் குதிரையை அடக்கிச் சரியான நிலைமைக்குக் கொண்டு வந்து வண்டியைத் திருப்பிக்கொண்டு அங்கே வந்தான். உடனே அம்மாதரசி, நம் மரகதத்தை அவ்வண்டியில் வைத்து எடுத்துக் கொண்டு தன் வீட்டுக்குப் போய், மரகதம் கொண்டு சென்ற தண்ணீர் சிதறி அவளுடைய ஆடை யெல்லாம் நனைந்து போயிருந்தபடியால் தன்னுடைய வேலைக்காரியைக் கொண்டு அந்த ஈர உடையை மாற்றி வேறு மெல்லிய தோர் உடையை அவளுக்கு அணியும்படி செய்து, அவளை ஓர் மஞ்சத்தில் கிடத்தி,அவள் முகத்தில்ஜலம் முதலியவற்றைத் தெளித்து அவளுடைய மூர்ச்சை தெளிவதற்கு வேண்டிய பரிகாரங்களைச் செய்து கொண்டிருந்தாள். மரகதம் சீக்கிரத்தில் மூர்ச்சை தெளிந்து கண் திறந்து பார்க்கவில்லை. அதனுல் அந்தப் பெண் அதிகமான கவலையை அடைந்து, 'ஐயோ! இந்த அம்மாளைப் பார்த்தால் பூரண கர்ப்பிணியாகக் காணப்படுகின்றுளே! இவளுக்கு இன்னம் மூர்ச்சை தெளியாமையினுல் என் மனம் மிகவும் வருந்துகின்றதே! ஓர் வயித்தியரையேனும் தருவிக்கலாமா!" என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவ்விதம் அம்மாது உட்கார்ந்திருந்த தருணம் நம் மங்கையர்க்கரசியாகிய மரகதம் சற்று மூர்ச்சை தெளியப் பெற்றவளாய்க் கண்

திறந்து பார்த்தாள். தான் இருப்பது எந்த விட மென்பதை யறிந்து கொள்ளத் தன் விழிகளை நாற்றிசைகளிலும் செலுத்தினாள். அங்ஙனம் செலுத்திப் பார்த்த போது தான் கீழே விழுந்த விடத்திலில்லாமல் ஓர் பெரிய மாளிகையிலிருப்பதாக அறிந்தாள். அதோடு தன் பக்கலில் அழகே உருக் கொண்டாற் போன்ற அந்த அணங்கு மிருக்கக் கண்டாள். தான் அதுகாறும் கிழவியையும் அன்னவள் மகளையும் தவிர இதர மனிதர்களைக் காணு திருந்து, அப்போது ஓர் அன்னிய மாதரசியின் பக்கலில் இருப்பதைக் கண்டதும் அவளுடைய உள்ளம் துடித்தது. அவளுடைய பழங்கதைகளும், பேப்பர் விஷயமும் அவள் உள்ளத்தில் திடுமெனத் தோன்றின. அவ்விதம் தோன்றியதனால் அவளுடைய கலக்கமும், மனோவேதனையும் முன்னிலும் அதிகரித்து அவளுக்கு அபாரமான திகிலையுண்டாக்கிவிட்டன. அத்திகிலால் அவள், "ஐயோ! ஈசன் நமக்கு இத்தகைய எதிர் பாராத ஆபத்துக்களை யெல்லாம் ஏன் அளித்து நம்மை வருத்துகின்றாரோ தெரிய வில்லையே" என்று மெல்ல எழுந்து உட்கார முயன்றாள்.

அவ்வாறு மரகதவல்லிக்குச் சற்று தெளிவேற்பட்டு அவள் கண்களைத் திறந்ததுடன் எழுந்து உட்காரவும் எத்தனிப்பதைக் கண்டு அந்த மாது, மிகுந்த சந்தோஷத்தை யடைந்து, அவளை நோக்கி, "அம்மணி! பாவி என்னால் தங்களுக்கு நேர்ந்த இவ்வெதிர் பாராத ஆபத்திற்கு நீங்கள் மனம் வருந்தாமல் என் குற்றத்தை மன்னிக்க வேண்டுகிறேன்; தங்களுடைய மூர்ச்சை தெளிந்து விட்டதா? இதோ இந்தப்பாலைப் பருகுங்கள்; எழுந்திருக்கவேண்டாம்" என்று தடுத்து அவளைத் தன் மடியில் சாத்திய படியே சூடான பாலை அவளுடைய வாயில் வெகு பக்ஷத்துடன் வார்த்துப் பருகச் செய்தாள். தன்னுடைய சொந்த மனிதர்களின் அன்பை விட அதிகமான பிரியத்துடனும், நன் மதிப்புடனும் தனக்குப் பால் வார்த்த அந்த மாதரசியின் குணத்தையும், பெருந்தன்மையான நடக்கையையும் கண்ட மரகதம் அவள் மீது மிகுந்த பக்ஷ முடையவளானாள். அவள் ஊட்டிய பாலைப் பருகி விட்டுப் பின்பு, படுத்த படியே அம்மங்கைநல்லாளை நோக்கி மிகுந்த வணக்கத்துடனும்,

அன்பாகவும் பேசத்தொடங்கி, "அம்மணீ! நான் தற்போது பூரண மான உணர்வைப் பெற்றிருக்கிறேன்; எனினும் கீழே தள்ளப்பட்ட அதிர்ச்சியினுல் வயிற்றில் சிறிது வலி இருந்து கொண்டே யிருக் கிறது; அதனுல் பாதகமில்லே; நான் தற்போது தங்களுடைய வீட் டிலிருக்கின்றேனென்பதைத் தெரிந்து கொண்டேன்; தங்களுடைய குணத்தின் விசேஷம் மிகவும் மெச்சத்தக்கதாயிருக்கிறது; எனி னும் அதைப் பற்றித் தங்கள் எதிரிலேயே தங்களே ஸ்தோத் திரம் செய்ய எனக்கிஷ்டமில்லே, அவ்வாறு செய்வது முகஸ்துதி யாகும்; ஆதலின் என் மனதிற் குள்ளாகவே தங்களேப் பற்றி மகிழ் ச்சி யடைகிறேன்; தாயே! தங்களேப் பார்க்கும் போது தாங் கள் வெகு சிறிய பிராயத்து மடந்தை போலக் காணப்படு கிறீர்கள்; தங்கள் வயதோடொத்த வயதையுடைய யான், தங்களே இவ்வளவு மரியாதையான வார்த்தைகளால் கௌரவப் படுத்துவது தங்கள் பெருந் தன்மையை உத்தேசித்தே; தங்களுடைய வயது என்ன? இவ்விடத்தில் தங்களுடைய மனிதர்களெல்லாம் இருக்கின் ருர்களா?" என்று வினவிக் கொண்டே எழுந்து மெல்லத் தலேயணே யிற் சாய்ந்தபடியே உட்கார்ந்தாள்.

இவற்றைக் கேட்ட அம்மாதரசி மிகுந்த பணிவாகப் பேசத் தொடங்கி, "அம்மணீ! தாங்கள் கூறியபடியே எனக்குத் தற்போ தே வயது 18 நிறைந்து 19 நடக்கின்றது; தங்களுக்கு மவ்வளவு தானு ஆகின்றது?" என்று மரகதத்தைக் கேட்டாள்.

மரகதவல்லி:—"அம்மணீ! தாங்களே என்னே விடக் கொஞ்சம் அதிகப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்; எனக்கு 18 வயது தான் ஆகி றது; தங்களுக்குக் குழந்தைகளெத்தனேயுண்டு? இது தம்முடைய கணவர் வீடா, அல்லது தாயார் வீடா? தங்களுடைய நாமதேயம் யாது?" என்ருள்.

அம்மாதரசி இவற்றைக் கேட்டவுடன் ஏதோ ஒரு விதமான வருத்தமும், லஜ்ஜையும் மேலிட்டவளாய், மிகவும் சலிப்பாகப் பேசத்தொடங்கி, "அம்மணீ! என்னுடைய சரித்திரத்தைத் தாங்க ளறிந்து கொள்ளவா விரும்புகிறீர்கள்! ஆகா! அகிலங்களே யெல்லாம்

ஆண்டருளும் ஆதி மூர்த்தியின் அபூர்வசிருஷ்டிகளில் ஒன்றான பாவியாகிய எனது பிறவி எனக்கே மிகுந்த அருவருப்பைத் தருகின்றது; எனினும் தாங்கள் ஏதோ ஒருவிதமான அன்பை என்பால் செலுத்தி என்வரலாற்றைக் கேட்பதால் நான் கூறுகின்றேன் கேளுங்கள்; என் பெயர் மதிவதனு என்பதாகும்; எனக்கு இப்புவியில் கடவுளைத் தவிர வேறு உரிய மனிதர்களும், மக்களும் இல்லை; அந்த நாராயண மூர்த்தி யொருவனே எனக்குத்துணை யாவன்; அம்மணீ! என் குலத்தைப்பற்றிக் கூற என் மனம் கூசுகின்றது; இன்பத்தைக் காசுக்கு விற்றுப் பணம் கொடுப்பவர் மீது சிறிதும் அன்பில்லாமல் பாசமுள்ளவர்கள் போல வேஷம் போட்டு நடிக்கும் பாசாங்கு நிறைந்து ஆசபாசமான தொழிலைப் புரிந்து மானத்தையிழந்து வாழ்வோராகிய தாசிகளின் இழிவான குலத்தில் நான் உதித்த மாபாவியாவேன்; ஐயோ! அம்மணீ! இக்குலத்தில் என்னைப் பிறப்பித்த அப்பிரமதேவனை மகா கொடியவனென்றே கூறவேண்டும்; இதைப்பற்றி எனது மனம் தாங்க முடியாத எரிச்சலுடன் துடிக்கின்றது; தாயே! தாங்கள் என்னுடைய இத்தகைய இழிவான குலத்தை யறியு முன்னர் இவ்விடத்திலிருக்க அருவருப்புக் கொள்ளாதிருந்திருப்பீர்கள். இப்போது பாவியாகிய என் குலத்தை யறிந்துகொண்டதால் இனி இங்கிருக்கப் பிரியப்படமாட்டீர்கள்; இதைக் கேட்டவுடன் தங்கள் முகம் வேறுபட்டிருக்கிறது; அக் குறிப்பே தாங்கள் இங்கிருக்க அருவருப்புக் கொண்டிருக்கிறீர்களென்பதை விளக்குகின்றது; அம்மணீ! தங்களுடைய நாமதேயம் யாது? தங்களிருப்பிடம் எது?" என்று மிகுந்த கனிகரத்துடன் மரகதத்தை விசாரித்தாள். அவள், இழிகுலத்தில் பிறந்தவளாயிருந்தும், அக்குலத்திற்குரிய குணங்களை யொழித்து நற்குணத்தோடிருப்பதையும், அக் குலத்தை வெறுப்பதையும், குலமாதர்களிடத்திலுள்ள செய்கை அவளிடத்தில் பொருந்தியிருப்பதையும், மரகதம் உணர்ந்து மிகுந்த வியப்பையடைந்து அம் மதிவதனுவின் மீது ஓர் விதமான அனுதாபங்கொண்டாள். அவ்வாறு கொண்டு அம்மதிவதனுவை நோக்கி, "அம்மா! நீ சொல்லியபடி நான் உன் குலத்தைக் கேட்டவுடன் வெறுப்புற்றது உண்மையே; எனினும் பின்னர் நீ கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் உன் மீது எனக்கு அருவருப்பு ஏற்படவில்லை; என்னு

டைய பிறவியை யான் ஒருவிதத்தில் வெறுக்கின்றதுபோலவே நீயும் உனது பிறவியை வெறுத்துக் கூறுகின்றாய்; நீ தாசி வகுப்பில் பிறந்திருந்தாலும் அவர்களுக்குள்ள அற்பகுணங்கள் உன்னிடம் சிறிதும் காணப்படவில்லை; வெகு மேன்மையான குணங்களே காணப்படுகின்றன; நீ உன் குலத்தினரின் சீர் கெட்ட குணங்களையும் நடக்கைகளையும் அருவருத்துக் கூறுகின்றாய்; இவற்றை யெல்லாம் உணர்ந்த யான் மிகுந்த வியப்புற்று உன்னைப்பற்றி மகிழ்கின்றேன்; ஏனம்மா! உனக்குத் தாயார், உடன் பிறந்தோர் முதலிய எவரும் இல்லையா? அல்லது இருந்து எங்கேனும் போயிருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

மதிவதனா:—"ஐயோ! எனக்கு மற்றவர்கள் இல்லாவிடினும் தாயில்லாமலிருக்க முடியுமா! தாயின்றி யான் எவ்விதம் உலகத்தில் ஜனிக்கக்கூடும்? தாயார் இருக்கிறாள்; தந்தையைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது; தந்தை விஷயம் மிக வெட்கக் கேடானது; எங்கள் குலத்திற்கே பொதுவாக ஏற்பட்டிருக்கும், 'தாசி மக்களுக்குத் தந்தை யார்!' என்கிற பழமொழிப்படி எனக்குத் தந்தை இன்னாரென்று கூறமுடியாது; "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் முது மொழிப்படி தாய் தந்தை யிருவரையும் தெய்வமாகப் போற்றும் பாக்கியம் எனக்கில்லை; அன்னை யொருத்தியே நான் தெய்வமாகப் போற்றக் கூடியவளாயிருக்கிறாள்; எனினும் அத்தகைய அன்னையே எனக்கு இன்னல்களைச் செய்யும் எதிரியாக அமைந்து விட்டாள்; என் அன்னையும், என்னுடன் பிறந்த ஓர் சகோதரியும் சென்னையிலிருக்கிறார்கள்.

எனக்கு 2-3 வயது நடக்கும் போது என் தாயாருக்கு என் சகோதரி பிறந்தாள்; எங்கள் ஜாதிக்கு உகந்தவாறாகவும், வழக்கப்படிக்கும் எனக்கு மதிவதனா என்றும், என் சகோதரிக்கு மைதிலி என்றும் என் தாயார் பெயரிட்டாள்; அங்ஙனம் பெயரிட்டு என்னை வதனாவென்றும், அவளை மைலா என்றும் வழக்கத்தில் அழைக்கத் தொடங்கினாள்; எனக்குப் புத்தி தெரிந்த காலம் முதல் நான் இவ்வூரிலுள்ள பள்ளியில் நன்றாகப் படித்து வந்தேன்; எனக்குச் சங்கீதம், பரத நாட்டியம் முதலியவற்றை என் தாயார் கற்றுக் கொ

டுத்தாள்; ஆனல் எனக்குப் படிப்பில் இருந்த சிரத்தை மற்ற எதிலும் ஏற்படவில்லை; எனினும் தாயாரின் விருப்பத்திற்கிசைந்து கல்வியைச் சிரத்தையுடன் கற்று வந்ததோடு மற்ற தொழில்களையும் தெரிந்து கொண்டேன்.

என்னுடைய கல்வியின் ;மாண்பினல் எனது அறிவு மிகவும் விருத்தியடைந்தது; என் தாயாரின் பெயர் மதனசுந்தரி யம்மாள் என்பது ; அவளும் மிகுந்த அழகாயிருப்பாள்; அந்த அம்மாள் தன் பிறவியின் பயனைச் சிறிதும் அறியவில்லை; தான் பிறந்தது இப்பூமியில் ஏற்படும் நிலையற்ற இன்பத்தை அனுபவித்தற்கே என்றும், அது எப்போதும் நிலைத்திருக்குமென்றும் நினைத்து அவ்வின்பத்தை யடையும் பொருட்டுப் பலரும் வெறுக்கும் மகா மோசத் தொழிலாகிய வேசித் தொழிலையே சிறந்த தெனக் கொண்டு நடத்தி வந்தாள்; என் தங்கையும் அத் தொழிலிலேயே விருப்பமுடையவளாயிருந்தாள்; அவர்கள் அவ்வாறு விரும்பிய அத் தொழிலை யான் சிறு பிராய முதல் வெறுத்தே வந்தேன்; எனது 13-வது வயதில் நான் புஷ்பவதியாகினேன்; அதன்பின் என் தாயார் எனது படிப்பை நிறுத்தி விட்டாள்; அவ்வாறு நிறுத்திவிட்டு என்னையும் தாசித்தொழிலையே கொள்ளும்படி வற்புறுத்தினள்; அதில் என்னைப் பழக்கவும் எண்ணங்கொண்டு அதற்கான முயற்சிகளைச் செய்யத் தொடங்கினள்.

என் தாயார் அவ்வாறு தனது கெட்ட நடத்தையையே நானும் கைக்கொள்ளும் படி செய்யத் தொடங்கவே அதற்கு யான் சிறிதும் உடன் படாமல் அதனை மறுத்து விட்டேன். பின்னர் தாசிகளின் இழி குணங்களை விளக்கிக் காட்டும் தன்மையுடன் வெளிவந்த புதிய நாவலாகிய வைதேகி என்ற நாவலையும் என் தாயாருக்குப் படித்துக் காட்டி அதில் தாசி வேசிகளைப் பற்றிக் கூறியுள்ள விஷயங்களை நன்ருக எடுத்து விளக்கிக் கூறினேன்.

நான் அவ்விதம் செய்ததால் என் மீது என் தாயார் அளவு கடந்த கோபம் கொண்டு என்னை முற்றும் வெறுத்து, சிலகாலம் என்னுடன் பேசாமலிருந்தாள்; என் சகோதரியாகிய மைலா என் தாயாரின் இஷ்டப்படி நடக்க இசைந்து அவ்விதமே நடக்கவும் தொ

டங்கினுள்; என் தாயாருக்குத் தன்னுடைய இஷ்டப்படி நடந்து கொள்ளும் சிறிய புதல்வியினிடமே அதிக பக்ஷம் ஏற்பட்டுவிட்டது; அதனுல் என் தாயார் அவளுக்கே சகல விதத்திலும் சௌக்கியங்களைச் செய்து வந்தாள்; அவளும் 13 வது வயதில் புஷ்பவதியாகினள்; அதன் பின்னர் என் தாயார் அவளைப் பாட்டுக் கச்சேரி, கதை முதலியவற்றில் பழக்குவதற்குச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு பிரயாணமானுள்; அப்போது என்னையும் கூப்பிட்டாள்; யான் அங்குச் செல்ல மறுத்துவிட்டேன்; என் அத்தை இங்கு இருக்கிருர்கள்; அவர்களுடன் யான் தனித்து இவ்விடத்திலேயே இருந்து வருகிறேன்; 'என்னுடைய பாகத்தை எனக்கு இப்போதே பகிர்ந்து கொடுத்து விடுங்கள்' என்று என் தாயாரிடம் கேட்டு அதை மட்டும் பெற்றுக் கொண்டேன்; என் அத்தையைத் துணையாகக் கொண்டு நான் இங்கிருந்து என் விதியை அனுபவித்துத் தொலைத்து வருகிறேன்; எனது பாகத்தில் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு யான் எனது வயிற்றையும், என் அத்தையின் வயிற்றையும் நிரப்பி வருகிறேன்.

சென்னையில் கோபாலநாம்கார் தெருவில் என் தாயாரும், தங்கையும் அவர்களுடைய ஜாதிக்கு ஏற்றவிதமாகத் தலை கால் தெரியாமல் மோசத் தொழில்களை நடத்திப் பல குடும்பங்களைக் கெடுத்துப் பல குடும்பஸ்திரீகள் குடல் எரிந்து இடும் சாபத்தைப் பெற்றுக் கொண்டு லீலா விநோதமாக இருக்கிருர்களாம்; அவர்கள் செய்கையைக் கேட்க என் அங்கமுற்றும் குன்றிப் போய் விடுகின்றது; என்ன செய்வேன் ? அம்மா! நான் தனித்திருப்பதில் மன அமைதி யேற்படவில்லை; ஐயோ! தினந்தோறும் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் எனக்கு உபத்திரவமே உண்டாகிக் கொண்டிருக்கின்றது; அந்த உபத்திரவம் நேராதிருக்கும்படி நான் என்னென்னவோ தந்திரங்கள் செய்து பார்த்தும் அது நீங்கினபாடில்லை; என் தாயார் எனக்கிட்ட மதிவதனு வென்ற பெயர், நான் தாசி யென்பதை வெளிப்படுத்தக் கூடியதாயிருந்தபடியால் அதை யான் வெறுத்து யாவரும் சாதாரணமாக வைத்துக் கொள்ளும் அம்புஜம் என்ற பெயரை வைத்துக் கொண்டேன்; அப்படிச் செய்தும் கூட

நான் தாசி யென்ற தன்மை மறையவில்லை; என்னிடம் பாழும் அழகு குடிகொண்டிருப்பதாலும், நான் தாசிப் பெண் என்பதைப் பலர் அறிந்திருப்பதாலும், கரும்புக் கட்டை எறும்புகள் சூழ்வது போல பல தூர்த்தர்கள் என்னிடம் நெருங்கி வந்து எனக்கு உபத்திரவத்தைச் செய்து வருகிறார்கள்; கடவுள் இத்தகைய நிலையில் என்னை வைத்து வேடிக்கை பார்க்கிறார் ; பணம் படைத்த மைனர்களும், இன்னும் பத்தினிக்குத் துரோகம் செய்யும் தூர்த்தர்களும் தினம் என்னிடம் வந்து ரூபாய் ஆயிரம் இரண்டாயிரம் தருவதாகவும், தங்களை ஆசை நாயகராக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி வற்புறுத்தி வருகிறார்கள்; இதனால் ஏற்படும் உபத்திரவத்தை என்னால் சகிக்கக் கூடவில்லை; இந்தத் தொல்லைக் காகவே யான் வீதிக் கதவையே திறக்காது சில தினங்கள் இருந்து வந்தேன்; அப்படியிருந்தும் துன்பம் விட்டதா! சுவர் மீது ஏறிக்குதித்துச் சோதாக்கள் உள்ளே புகுந்து என்னை உபத்திரவிக்கத் தொடங்கினார்கள்; ஐயோ! யான் என் பிழைப்பை என்னவென்றுதான் கூறுவேன்!

அம்மணீ! தற்போது சிலர் தேவ தாசிகள் சம்பந்தமாக ஓர் பில் கொண்டு வந்துள்ளதைப்பற்றி ஒரு விதத்தில் என் மனம் சந்தோஷமடைகின்றது; இச் சட்டத்தின் மூலமாகவேனும் இத் தாசிகளின் ஈனத் தொழில் ஒருவாறு குறையுமென்று நான் நினைக்கிறேன்; தாசிகளிற் சிலர் செய்யும் அக்கிரமமான செய்கையைச் சில அறிஞர் சந்தியில் இழுத்து விட்டுப் பலரும் அறியச் செய்வதையும், அவற்றைக் கண்டு பலர் அத் தாசிகளைக் காறித் துப்புவதையும் காணும் போது என்னுள்ளம் சந்தோஷ மடைகின்றது.

இந்த ஜாதி தோன்றிய நாள் முதல் தொடங்கி நடைபெற்று வரும் பொட்டுகட்டுவதை யவர்கள் விட்டாலும் சரி, விடாமற் போனாலும் சரி; அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை; தாசிகளில் சிலர் செய்யும் அடாத தொழில்களைக் களைந்து அவர்களைக் குலமாதர்களைப் போலாக்கப் பெரு முயற்சி செய்யவேண்டும்; அவ்வாறு சீர் திருத்தி விட்டால் அவர்களை தெய்வமாதர்களென்றே சொல்லலாம்; அட்டை என்னும் ஒரு வகைப் பூச்சியானது மனிதர்களின் தேகத்தைப் பிடித்துக் கொண்டால் அவர்களுடைய இரத்தத்தைத் தன்வயிறு நிறையு மட்டும் உறிஞ்சிய பிறகே தான் பிடித்த பிடியை விடும்; அதைப் போலவே தாசிகள், தனவந்தரைப் பிடித்து விட்டால் தங்கள் ஆசை தீரு மட்டும் அவர்களுடைய பொருள்களை இழுத்துக் கொண்ட பிறகு தான் அவர்களை விடுவார்கள் ; இன்னும் அவர்கள் மேற் கூறியபடி தனவந்தர்களுடைய பொருள்களைக் கவர்ந்து அவர்களைத் தரித்திராக்கி விடுவதுடன், தங்களுடைய சேர்க்கை யென்னும் விஷத்தி

ஞல் அவர்களுடைய இரத்தத்தையும் கெடுத்து, அவர்களுக்குப் பற்பல நோய்களைக் கொடுத்து, மிகுந்த சங்கடத்தையுண்டாக்கி, அவர்களின் மனைவிமார் கண்ணீர் விட்டழுது குடல் எரிந்து வெதும்பி உயிர் துறக்கவும், அவர்களுடைய மக்கள் சோற்றுக்கு வழியின்றி அனாதைகளாய்த் தெருவில் திரிந்தலையவும் செய்துவிடுவார்கள்; இவர்கள் இத்தகைய கொடுமைகளைச் செய்யாது குலமாதர்களைப் போல மணம் செய்துகொண்டு சுகஜீவியர்களாக வாழும் முறையைக் கைப்பற்றி வரத்தக்க மார்க்கத்தை எந்த உத்தமர்களேனும் செய்துவைக்க முன்வருவார்களாயின் இக் குலத்தினர்க்கும் உலகத்திற்கும் மிக்கநன்மை யுண்டாகும்; இதைப் பற்றிய கவலை என்னை வதை செய்கின்றது.

என்னுடைய ஜாதியின் ஊழல்களைக் காணக் காண எனது பிறவியையே யான் வெறுக்கின்றேன்; நான் அத்தகைய இழிகுலத்திற் பிறந்திருந்தாலும் உலகத்தாருக்கு நன்மை செய்யுங் கருத்துடனிருந்து வருகிறேன்; மதி யிழந்து மனைவியைத் துறந்து மண்டைத் திமிர் கொண்டு பணத்தைக் கண் மூடித் தனமாகத் தாசிகளுக்கு அளித்துக் களிப்பதிலேயே தங்கள் புத்தியைச் செலுத்தி, அவர்களோடு கூடும் இன்பமே இன்பமென்று எண்ணித் திரியும் அறிவீனர்களைச் சரியான வழியில் திருப்பி அவர்களுக்குப் புத்தி வரும்படியான நீதி வாக்கியங்களை உரைத்து நல்லறிவை யுண்டாக்கி, அவர்களுடைய பணங்களைக் கொண்டு அன்ருடம் கஞ்சிக்கு பஞ்சமாகத் துஞ்சிக்கிடக்கும் ஏழைகளுக்கு உதவி செய்தால் மிகுந்த புண்ணியம் கிடைக்குமென்ற நோக்கம் எனக்குண்டாகி அதற் குரிய முயற்சிகளை நான் செய்து வருகிறேன்; அதற் கனுகூலமாக ஓர் பெரியாரும் உதவி புரிந்து வருகிருர்; அம்மா! உன்னதமான குலத்தில் உதித்த தங்களுக்கு இவ்வாபாசச் சரிதையைக் கேட்க மிகுந்த அருவருப்பாயிருக்கும்; இதைப் பற்றி யான் மிகுந்த லஜ்ஜையும், துயரமும் அடைகிறேன்'' என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தாள்.

இவளுடைய அரிய கருத்துக்களடங்கிய வார்த்தைகளைக் கேட்ட மரகதம் மிகுந்த ஆச்சரியமடைந்தவளாய், அவ்வாரணங்கை நோக்கிப் பேசத் தொடங்கி, "என்ன! என்ன!! சென்னையில் ஹரிகதை செய்யும் மைலாவின் கூடப்பிறந்த சகோதரியா நீ! அடாடா! மலைக்கும் மடுவிற்கு முள்ள வித்தியாசம்போல விருக்கின்றதே உங்களுடைய குண வேறுபாடுகள்! உங்களுடைய நடக்கைகளைக் கவனிக்கும்போது வியப்பின்மீது வியப்பாக விருக்கின்றதே! அந்தப் பெண்மணி சென்ற வருடத்தில் சென்னையில் எங்கள் பந்துக்களின் வீட்டுக் கலியாணத்திற்கு வந்து காலக்ஷேபம்

செய்தாள்; அடாடா! என்ன தளுக்கு! என்ன மினுக்கு! அவள் அசாத்திய பேர்வழியாக விருந்தாள்; அவளுக்கு 15 அல்லது 16 வயதுதானிருக்கும்; இதற்குள் அவளுடைய வலேயில் அகப்பட்டு அழிந்த வாலிபர்களேக் கணக்கிடுதல் முடியாதாம்; சமீபத்தில் அவளுடன் பின் பாட்டு வெகு நேர்த்தியாய்ப் பாடுகிறவன் சேர்ந்திருக்கிருனும்; அவன் அவளுடைய பாதமே கதி என்று நம்பி யிருக்கிருனும்; அவனுக்கு வெகு அழகு வாய்ந்த ஓர் மனேவி யிருக்கிருளாம்; அவளே அவன் அறவே விலக்கிவிட்டுக் கண்ணெடுத்தும் பார்க்காமல் மைலா வீட்டிலேயே இருக்கிருனும்; அதனல் அப்பெண் மிகுந்த துயரத்தை யடைந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலேமையில் இருக்கிருளாம்; இந்த விஷயங்களே எங்கள் வீட்டில் உள்ளவர் சொல்லிக்கொள்ள நான் கேள்விப் பட்டிருக்கிறேன்; நீ கூறிய இவ் வரலாற்றைக் கேட்டதும் நான் வியப்படைந்துவிட்டேன்; அத்தகைய கொடும் பாவியுடன் பிறந்த உத்தமியா நீ! ஏனம்மா! தனியாக வாசம் செய்யும் நீ எத்துணை ஜாக்கிரதையாக இருந்தபோதிலும் சாதாரணமாக உனக்கு ஆபத்து நடந்துகொண்டே யிருக்குமே! நீ ஏன் தகுதியான ஒரு நற்குணவானேப் பார்த்து விவாகம் செய்துகொண்டு அப் புருஷனின் பாதுகாப்பில் இருக்கக் கூடாது? இவ்விதமான உன்னத எண்ணமுள்ள நீ அவ்விதம் செய்வதில் தடை என்ன?'' என்று கேட்டாள்.

அம்புஜம்:—அம்மணி! இவ்வுலக சுகங்களில் ஒன்றையும் என் மனம் விரும்பவில்லே; உலக இன்பங்கள் எல்லாவற்றிலும் எனக்கு மிகுந்த அருவருப்புண்டாகின்றது; என்னுடைய பாதுகாப்பிற்காக யான் ஒருவரை மணம் செய்துகொள்ள எண்ணினுலும், நான் தற்போது செய்துவரும் தொழிலுக்கு அவ்விதம் செய்துகொள்வதானது தடையாக நேரும். தற்போது எனக்குள்ள இன்பமாவது ஏழை ஜனங்களின் வயிறு குளிர அவர்கள் குடிக்கும்படி அவர்களுக்குக் கஞ்சி ஊற்றுவதே; என் தாயார் எனக்குக் கற்றுக் கொடுத்துள்ள சங்கீதம், அபிநயம் முதலியவற்றை யான் பாழ்படுத்தவில்லே; என்னுடைய சரீரத்தை வருத்தி அத் தொழில்களில் உழைத்து அவற்றில் கிடைக்கும் வரும்படியைக் கொண்டு ஏழைகளே ஆதரித்து வருகிறேன்; இங்கே ஏழைகளே ஆதரிப்பதற்கென்றே ஒரு சொஸைடி ஏற்பட்டிருக்கிறது; எனக்குப் பாட்டுக் கச்சேரியிலும், சதுரிலும் கிடைக்கும் பொருளே அந்த சொஸைட்டிக்குக் கொடுத்து வருகிறேன்.

தினம் என்னிடம் கர்வம் பிடித்த பல கனவான்கள் வருகிருர்கள்; நான் அவர்களுக்குத் தகுந்தவாறு நீதி யுரைத்து இத்தருமத்திற்கே அவர்களிட மிருந்து பணத்தைப் பறித்துக்கொண்டு

அவர்களை அனுப்பி விடுவது வழக்கம்; இன்னும் சிறிது நேரத்திற்குள் ஒரு பெரிய சீமான் இங்கே வருவார்; அவரிடத்திலும் மேற்கூறிய தந்திரமான காரியத்தைத்தான் நான் செய்வேன்; அவருடைய வருகையின் நேரமும் சமீபித்துவிட்டது" என்று சொன்னாள். அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஓர் இரட்டைப் புரவிகள் பூட்டிய இரதம் வந்து அவள் வீட்டு வாசலில் நின்றது; அதினின்றும் ஓர் பிரபு இறங்கினார். வெளியிலிருந்த வேலைக்காரன் ஓடிவந்து அவர் வந்த செய்தியை அம்புஜத்தினிடம் தெரிவித்தான்.

அதைக்கேட்ட அம்புஜம், மிகுந்த சலிப்படைந்து, "சரி; அவரை யழைத்துவந்து வழக்கமா யுட்காரும் அறையில் உட்காரச் சொல்" என்று அவ் வேலைக்காரனிடம் கூறினாள். இதற்குள் மரகதம், "அம்மா! நான் வெகுநேரமாகப் பேசிக்கொண்டே யிருந்துவிட்டேன்; இனி நான் என் வீட்டுக்குப் போகவேண்டும்; என்னை யனுப்பிவிடு" என்று சொன்னாள்.

அம்புஜம்:—"அம்மணி! இத்துணை நேரம்வரை நான் தங்களுக்கு என்னுடைய வரலாற்றைக் கூறுவதிலேயே இருந்து விட்டேன். இன்னும், தாங்கள் யார்? எங்கிருப்பவர்கள்? தங்கள் பெயர் என்ன? என்பவைகளைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளவில்லை; அதோடு தாங்கள் கீழே விழுந்த அலுப்பினால் மிகுந்த அவஸ்தைப்பட்டிருக்கிறீர்கள்; அந்த நிலையுடனும், கருப்பத்துடனும், இரவு 10 மணியுள்ள இந்நேரத்தில் தாங்கள் செல்வது உசிதமன்று; இன்று இரவு இப்பாவியின் வீட்டில் பாலும் கனிவகைகளும் உண்டு இங்குத் தங்கி, பொழுது விடிந்ததும் போய் விடலாம்; என்னம்மா! நான் சொல்வதற் கிசையவேண்டும்; தாங்கள் இங்கிருப்பதால் என்னுடைய வீட்டில் நடக்கும் விநோதங்களையும் இன்றிரவு கண்டுகொள்ளலாம்; எனது வேண்டுகோளை அங்கீகரிக்க வேண்டும்" என்று மிகவும் இரங்கி வேண்டினாள்.

இதைக்கேட்ட மரகதத்திற்கு அதற்குமேல் பதில் கூற முடியவில்லை. அதனால் அவள் அங்கிருக்கச் சம்மதித்தாள். பின்னர் அம்புஜம் மரகதத்தைத் தனது படுக்கை யறையில் ஒரு மறைவான விடத்தில் ஒளித்துவைத்துவிட்டுத் தான் ஓராசனத்தில் அமர்ந்துகொண்டு அங்கிருந்த மணியை அடித்தாள். உடனே ஓர் காம்பீரமுள்ள தோற்ற முடைய மனிதர் நகைத்த முகத்துடன் உல்லாசமாய் உள்ளே நுழைந்து மற்றொரு ஆசனத்தில் அமர்ந்தார்.

———

182899

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய அற்புதமான நாவல்கள்
(சித்திரப்படங்கள் கூடியவை)

## சண்பக விஜயம்

இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறது.

இதில் எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். விலை ரூ. 1-12-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 1-8-0.

## வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத குணங்களின்உயர்ச்சி முதலியனவும் கதாநாயகி நாயகருடைய தெய்வீகக் காதலின் இலக்ஷணம். கீரைக்கார காமாக்ஷியின் உயரிய குணங்கள், துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் மீந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந்தான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச் செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகரமாக விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும் பிரமுகர்களினாலும் மதிக்கப்பெற்றது. 540-பக்கங்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூபாய். 2-8-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0.

## பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெருமையும், கதா நாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான செய்கைகளும், செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக்கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்யரஸப் பிரதானமான செய்கைகளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப்பென்பதே தராமல் ஆநந்திக்கச்செய்யும். விலை ரூ. 2-8.0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0

"ஜகன் மோகினி" ஆபீஸ்,
26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0




இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒருகைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

**மோஹினி தைலம்.**
பாட்டில் 1-க்கு 0—12—0

**படைமருந்து**
டப்பி 1-க்கு 0—6—0

**பல்பொடி**
டப்பி 1-க்கு 0—2—0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,
7, தம்புச்செட்டி வீதி, சென்னை.



Published by V. M. Parthasarathy Iyengar,
*for* "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.